உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 32 | பரிதாபி - தை - 10—2—73 | இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# குறிகளும் அடையாளமும் - கோயிலும்

இறைவன் தனக்கென ஓர் ஊரிலான்: (சாத்துவிக இராசத தாமதங்களில்) ஒரு குணம் இலான்; குறி யிலான்; பேர் இலான்.

" ஊர் இலான்; குணம் குறியிலான்; செயல் இலான்;
உரைக்கும்
பேர் இலான்; ஒரு முன் இலான்; பின் இலான்; பிறிதோர்
சார் இலான்; வரல் போக்கிலான்; மேல் இலான்; தனக்கு
நேர் இலான்: உயிர்க் கடவுளாய் என்னுளே நின்ருன் "

என்கின்றது கந்த புராணம்.

" ஒப்புடையன் அல்லன்; ஒருவன் அல்லன்;
ஓர் ஊரன் அல்லன்; ஓர் உவமன் இல்லி;
... ... ... ... ... ...
இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன்,
இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணுதே "

என்கின்றது தேவாரம். உயிர்கள் யாதொரு பொருளையும் அதன் குணம், குறி, பெயர் முதலியவற்றைக் கொண்டே உணருந்

தன்மையன. அவ்வாறிருக்கும்பொழுது, இறைவன் ஊர், பேர், குணம், குறி முதலியவற்றுள் ஒன்றும் இல்லாதவனுய் இருப்பின், அவனை அவை எவ்வாறு உணர முடியும்? ஆம்; உணரமுடியாதுதான். ஆனல், மற்றைய எப்பொருளுக்கும் இல்லாத ஓர் அதிசயத் தன்மை இறைவனுக்கு உள்ளது. அஃதாவது, ஏனைய பொருள்கள் யாவும், 'அருவம், உருவம், அருவுருவம்' என்னும் வகையிலும், 'விரிதல்' (விருத்தி) 'மெய் பிறிதாதல்' (பரிணமம்) 'போலியாய்த் தோன்றல்' (விவர்த்தனம்) முதலிய வகையிலும், 'சிறிது, (அணு) பெரிது (மகத்து) முதலிய வகையிலும், மற்றும் பிற வகையிலும் ஏதேனும் ஒரு வகையில் நின்று, பின் மற்றொரு வகையை அடையமாட்டாதனவாம். அதனல், அப் பொருள்களுள் ஒவ்வொன்றனையும், 'இஃது இன்ன வகையைச் சார்ந்தது; இத் தன்மையை உடையது' என்று வரை யறுத்துச் சொல்லிவிட முடியும். ஆனல், இறைவன் அவ்வாறு ஒரு வகையிலே நின்று, மற்றொரு வகையில் நிற்கமாட்டாதவன் அல்லன். ஆகவே, அவனை அவ்வாறு யாதேனும் ஒரு வகையில் வைத்து வரையறுத்தல் இயலாது. எனவே, மேற்கூறிய வகை யில் அவன் எவ்வகையினனும் ஆகலாம்; ஆகாமலும் இருக்க லாம். இதுவே அவனுக்கு உள்ள ஓர் அதிசயத் தன்மை. இதனையே,

> "பந்தமும் வீடும் ஆய பத பதார்த்தங்கள் அல்லான்;
> அந்தமும் ஆதி யில்லான்; அளப்பிலன்; ஆதலாலே,
> எந்தைதான், 'இன்னன்' என்றும், 'இன்னதாம், இன்னதாகி
> வந்திடான்' என்றும் சொல்ல வழக்கொடு மாற்றம் இன்றே"

என்கின்றது சிவஞான சித்தி. எனவே, 'ஊர் இலான்; குணம் குறியிலான், செயல் இலான், உரைக்கும் பேர் இலான்' என்னும் நிலையில் மிக நுண்ணிய பொருளாய் உள்ள இறைவன், ஏனைய பொருள்கள்போல ஊரும், பேரும், குணமும், குறியும் முதலியன உடைய பருப்பொருளாய் நிற்றலையும் உடையனுவான் என்பது நன்கு விளங்குவதாம். இவ்வாறு அவன், ஊர், பேர் முதலிய வற்றை உடைய பருப்பொருளாய் நிற்கும்பொழுதும், 'இன்ன இடத்தில், இன்ன காலத்தில், இன்ன அளவில்தான் நிற்பன்' என வரையறுத்தல் இயலாது. இதுவே மற்றைய பொருள் களினின்றும் வேறுபடுகின்ற அவனது தனிச் சிறப்பு. ஆகவே, இயற்கையில், உருவம், பெயர், செயல் முதலியன இல்லாதிருக் கின்ற அவன், உயிர்கள் தன்னை உணர்ந்து உய்தற்பொருட்டு அளவற்ற உருவம், பெயர், செயல் முதலியவற்றை உடையவ னும் ஆகின்ருன். அதுவே அவனது அருள் நிலை. அவன் உயிர்கள் பொருட்டுக் கொள்ளுகின்ற உருவம் முதலிய பலவும் பல்வேறு வகைப்பட்ட உயிர்கட்குப் பல்வேருன பயனை வழங்கு

வன. அவற்றை அவனது அருளைப்பெற்ற அருளாளர்கள் பலர் கண்டு உலகிற்கு உணர்த்தியுள்ளார்கள். அந்தக் குறிகள், அடையாளங்கள் முதலியனவே, வேதம், ஆகமம், புராணம் முதலிய நூல்களில் கேட்கப்பட்டும், திருக்கோயில்களில் காணப்பட்டும் விளங்குகின்றன. இதனல், திருக்கோயில்களின் பெருமையும் நூல்களில் பேசப்படுகின்றன. ஆகவே இறைவனது அருளுருவாகிய குறிகள், அடையாளங்கள், அவற்றை உடைய கோயில்கள் இவற்றின் சிறப்பினை நூல்களில் கூறியவாறே உணர்ந்து போற்றிப் பயன் பெறுதல் நல்லறிஞர்க்குக் கடனாகும். அதனைத் தம் இன்றியமையாக் கடனாக எண்ணாதவர், கல்வி, செல்வம், அதிகாரம் முதலியவற்றால் எத்துணைச் சிறப்புடையராயிருந்தும் பயனில்லை என்பதை,

"குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே"

என அப்பர் அறிவுறுத்தருள்கின்றார்.

'குறி' என்பதும், 'அடையாளம்' என்பதும் ஒன்று போலத் தோன்றினும், உண்மையில் அவை இரண்டும் வேறு வேறேயாம். 'குறி' என்பது உருவம். எனவே, குறியே பொருளாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு பொருளுக்கும், அதனைக் குறிக்கும் சொல்லுக்கும் வேறுபாடு மிக இன்மையால், பொருளைக் குறிக்கும் சொல்லாகிய பெயருக்கும், 'குறி' என்பது பெயராயிற்று. அதனை, 'இடுகுறி, காரணக்குறி, குறியிடு' முதலிய சொற்களால் அறிதல் கூடும். பொருள்களைப் பொதுமை நீக்கிச் சிறப்பாக 'ஆண், பெண்' என அறிய நிற்றற்கும் குறி, என்பது பயன்படுகின்றது. எனவே, 'குறி' என்பது பொருள் வடிவாகவே நிற்றல் அறிந்துகொள்ளப்படும். எனினும், அது, 'உருவம்' எனப் பொதுப் பொருள் தராமல் 'குறிப்பிட்ட பொருளின் உருவம்' எனச் சிறப்புப் பொருள் தரும்.

இனி, 'அடையாளம்' என்பது பொருளின் வடிவம் அன்று; பொருளை நினைப்பிப்பது. அரசர்களில் 'இவன் சேரன், இவன் சோழன், இவன் பாண்டியன்' என உண்மையில் வேறு வேறாய்க் காணப்படுதல், அவரின் வேறாகாத அவர்களது தோற்றமாகிய உருவத்தினலேயாம். ஆகவே, அவ்வுருவங்களே குறிகள். 'சேரன், சோழன், பாண்டியன்' என்னும் பெயர்கள் அவ்வுருவத்தொடு ஒன்றி நிற்கின்றன. இனி, 'வில், புலி, மீன்' என்னும் கொடிகள், 'பனை, ஆத்தி, வேம்பு' என்னும் மாலைகள் முதலியன அவ்வரசரின் வேறாய், அவர்களை நினைப்பிக்

கின்றன. அவை அவ்வரசர்கள் இல்லாத இடத்திலும் தனியே காணத்தக்கனவாய் இருந்து, அவைகளைக் காணும்பொழுது அவ்வரசர்களை நினைப்பிக்கும். அதனால், வில் முதலிய கொடிகளும், பனை முதலிய மாலைகளும், மற்றும் இவைபோல்வன பிறவும் அடையாளங்களேயன்றிக் குறிகள் அல்ல. ஆகவே, 'குறி' என்பது வேறு, 'அடையாளம்' என்பது வேறு என்பது நன்கு விளங்கும். குறி, 'இலிங்கம்' என்றும், அடையாளம், 'சின்னம்' என்றும் வடமொழியில் சொல்லப்படுகின்றன. இதனால், "குறிகளும், அடையாளமும், கோயிலும்" என்று அப்பர் திருவாக்கில் சொல்லப்பட்ட குறிகளும். அடையாளமும் சிவபெருமானது உருவமும், அவனை நினைப்பிக்கின்ற அடையாளங்களும் ஆதல் தெளிவு.

சிவபெருமானுக்கு, 'அருவம், உருவம், அருவுருவம்' என்ற மூவகைத் திருமேனிகள் உள. அவை யாவும் முதலிற் கூறிய படி அருள் திருமேனிகளேயாம். ஆகவே, அவையெல்லாம் அப்பெருமானது 'குறி' அல்லது 'இலிங்கம்' எனப்படும். இனி அவனது திருமேனிப் பூச்சாகிய திருநீறு, திருக்கண் மணியாகிய உருத்திராக்கம், படைக்கலமாகிய முத்தலை வேல், ஊர்தியாகிய இடபம், சூடுகின்ற கொன்றை மாலை முதலியவை அவனது அடையாளம் அல்லது சின்னம். இவையும் அருளே என்பதை மறத்தல் கூடாது. இவ்வாறு சிவபெருமானது குறிகள், அடையாளங்கள் என்பவற்றின் பெருமையையும், அவைகள் விளங்கி நிற்றற்கு இடமாகிய கோயில்களின் பெருமைகளையும் நூல்களில் கூறியவாறே உணர்ந்து அவற்றைப் போற்றிப் பணிகின்றவர்கள், சிவபெருமானை உணர்ந்து போற்றிப் பணிகின்றவர்களேயாவர். அதனால், அவர்கள் அப்பெருமானது திருவருளைப் பெற்று வேண்டிய பயனை வேண்டியவாறே அடைதல் திண்ணம்.

'அருவம், உருவம், அருவுருவம்' என்னும் மூவகைத் திருமேனிகளில் அருவுருவத் திருமேனி அருவம், உருவம் இரண்டையும் உடையதாய் இருத்தலால் சிறப்புடையதாகின்றது. அதனால், 'இலிங்கம்' என்னும் பெயர் அருவுருவத் திருமேனிக்கே சிறப்பாகச் சொல்லப்படுகின்றது. இலிங்கம்' என்னும் சொல் 'சித்திரிப்பது' என்னும் பொருளை உடையதாய், 'உலகத்தை உண்டாக்குவது' என்னும் பொருளை உடையது. எனவே, அஃது, உலகத் தோற்றத்திற்கு முதலாகிய சிவபிரானது முதன்மையையும் உணர்த்தி நிற்பதால், அதுவே சிவபெருமானுக்குச் சிறந்த குறியாகின்றது. இதனை,

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"

என்று அருளிச்செய்கின்றார் சேக்கிழார். இதனால், 'சிவ பூசை' என்பது இந்த இலிங்க பூசையாகவும், 'சிவாலயம்' என்பது இந்த இலிங்கம் இருக்கின்ற ஆலயமாகவுமே விளங்குகின்றன. சிவபூசை செய்து பலர் பலவகைப் பயன்களைப் பெற்றதாகக் கேட்கப்படுகின்ற வரலாறுகளில் எல்லாம் அவர்கள் செய்த பூசை பெரும்பான்மையும் இந்த அருவுருவத் திருமேனியாகிய இலிங்க பூசையாகவே இருத்தல் அறியத்தக்கது.

'இந்த இலிங்கத் திருமேனியை இறைவன் மேற்கொண்டது பிரம விட்டுணுக்கள் பொருட்டு' என்றும், 'சிவபிரான் இவ்வாறு சிவலிங்கமாய்த் தோன்றி நின்ற காலமே சிவராத்திரி காலம்' என்றும் இலிங்க புராணம் கூறும். இனி, 'உலகம் எல்லாம் ஒடுக்கப்பட்ட சருவ சங்கார காலமாகிய இருட் காலத்தில் இறைவன் ஒளியான திருமேனியுடன் தோன்றிய காலமே சிவராத்திரி காலம்' என்ற வரலாறும் உண்டு. பிரம விட்டுணுக்களுக்குத் தோன்றியது சிருட்டி காலத்தில் ஆதலால், இறைவன் அந்தம், ஆதி இரண்டுமாய் நிற்பது இச்சிவராத்திரி யில் அமைகின்றது. அதனால் சிவபெருமானைப் பற்றிய விரதங்களில் சிவராத்திரி விரதம் தலையாயதாம். உண்ணாமை உறங்காமை, சிவ வழிபாடு, சிவாலய தரிசனம் என்பவற்றைச் சிவராத்திரி காலத்தில் மிகச் சிறப்பாக மேற்கொள்ளுதல் சிவ நெறியின் மரபாக விளங்குகின்றது.

'சிவராத்திரி காலம் மாசிமாதத்துக் கிருட்டின பட்சம் சதுர்த் தசித்திதி இரவு' என்றும், 'அந்த இரவிலும், பதின்மூன்றே முக்கால் நாழிகைக்குமேல், ஒரு முகூர்த்த காலமே (மூன்றே முக்கால் நாழிகை) இலிங்கோற்பவ காலம்' என்றும் சொல்லப் படுகின்றன. அந்த இரவு நான்கு சாமங்களிலும் ஆன்மார்த்த பூசை பரார்த்த பூசைகளைச் சிறப்பாகச் செய்தலும், சிவாலய தரிசனம் செய்தலும் இன்றியமையாதன. நான்கு சாமமும் செய்ய இயலாதவர்கள், மேற்குறித்த இலிங்கோற்பவ காலத்தி லாவது இயன்ற அளவு இவற்றைச் செய்தல் வேண்டும். சிவராத்திரியில் சிவ பூசையை அறிந்தோ அறியாமலோ இயன்ற வகையில் செய்தவர்கள் அடைந்த சிறப்பினைப் புராணங்கள் பலபட எடுத்துக் கூறுகின்றன. 'சதுர்த்தசியோடு எவ்வகையி லாவது திரயோதசி சேர்வது உத்தமம்' என்றும், 'திரயோதசி சிறிதும் சேராவிடில் மத்திமம்' என்றும், 'அமாவாசை சேர்வது கூடாது' என்றும் சொல்லப்படுகின்றன. இவ்வகையில் அடுத்து வருகின்ற மகாசிவராத்திரி மத்திமமாக உள்ளது. அம்மகா சிவராத்திரியில் ஒவ்வொருவரும் இயன்ற அளவு இவ்விரத நெறியில் நின்று சிவபூசை சிவாலய தரிசனங்களைச் செய்து பயன் பெறுவோமாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

பூம்புகார், பேரவைக் கல்லூரியில் 1—2—73 அன்று
மெய்கண்டார் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்து
வழங்கியருளிய

# ஆசியுரை

திருநாவுக்கரசர் துதி

இடையறுப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவாரத்திண்
படையறுத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்தநெஞ்சும்
நடையறுப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறுச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்துவாழ்வாம்.

மெய்கண்டார் துதி

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவர் இதயகமல முகைக ளெல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெ மேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

மெய்யன்பர்களே!

திருநாவுக்கரசர் மெய்கண்டார் திருவுருவப் படங்களை இக்கல்லூரியில் திறந்து வைத்திருப்பது போற்றற்குரியது. இவை தொண்டு, ஞானம் இவற்றை மாணவர்கட்கு நினைவூட்டுவனவாய் விளங்கும். அருளாளர்களின் திருவுருவப் படங்களை, 'திறந்துவைப்பது' என்ற சொல்லாற் கூறுவதை விட 'எழுந்தருளுவித்தல்' என்ற சொல்லாற் குறித்தலே பொருத்த

மாகும். சமயாசாரியர்களில் ஒருவரும், சந்தானுசாரியர்களில் ஒருவரும் ஆகிய இவ்விருவரும் நமக்கு அருளிச்செய்த ஞான நூல்களை ஓதி உணர்ந்து உய்திபெறுதல் மக்கட்கு இன்றியமையாத கடமையாகும். நம் முன்னோர்களில் ஒரு பகுதினர் இந்நூல்களைப் பத்தியோடும் மரியாதையோடும் பூசித்துப் போற்றிப் பாதுகாத்தனர். தென்னாட்டிற்குப் பெருமைதரும் இத்தெய்வத் தமிழ்ப் பனுவல்களைப் பிறிதொரு பகுதியினர் மறந்தனர். பக்தி செலுத்தியவர்களுள்ளும் விபரமறியாத முறையில் பலர் இருந்தனர். இந்நிலையில் சமய நூல்களின் அருமை பெருமைகளையும் ஆசாரியர்களின் சிறப்புக்களையும் மக்கள் உணர மறந்தனர். பள்ளிப் பாட நூல்களில் சமய வரலாற்றுப் பகுதியில் சங்கரர், இராமாநுசர், மாத்வர் போன்றவர்களைக் குறித்தவர்கள் சமயாசாரியர்களைக் குறிக்கத்தவறினர். வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு தவறிய காரணத்தால் மக்களில் பலரும் இவர்களை மறக்கும் நிலை ஏற்பட்டது. சமய உண்மைகளை உணராத நிலையில் சமுதாயம் தூங்கியது. இனியேனும் சமுதாயம் விழித்தெழுந்து நாம் வாழ, நாடு வாழ அருள் நலம் வழங்கிய ஆசாரியர்களை அறிந்து போற்றுதல் வேண்டும்.

திருநாவுக்கரசு சுவாமிகளைத் தந்தை நிலையில் 'அப்பரே என்றழைத்தார் ஞானசம்பந்தர். அது அவரது பெயராகவே வழங்கிவருகிறது. திருநாவுக்கரசரோ அடியேன் என்றுகூறி அந்நிலையிலேயே அவரிடம் அன்பு பூண்டார். இவ்விரு பெருமக்களும் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். இவர்கள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களில் சைவசித்தாந்தத் தத்துவ உண்மைகள் பலவும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இவ் விலக்கியங்களுக்குப் பின்னர் இலக்கணமாய்த் தோன்றியனவே சைவசித்தாந்த சாத்திரங்களாகும்.

'இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்' என்ற நன்னூல் சூத்திரத்தின்படி இலக்கியங்கள் முதலில் தோன்றுகின்றன. அதற்குப் பின்னர்தான் அவைகட்கு வரம்பு செய்வனவாய் இலக்கணங்கள் தோன்றுகின்றன. வாழ்வியல் முறைகளில், மக்கள் நடைமுறைகள் முதலிலும், அவற்றின் வரம்புகளாகிய சட்டங்கள் பின்னரும் தோன்றலாயின. ஞானசம்பந்தர் முதலாக இருபத்தேழு அருளாசிரியர்களால் அருளிச் செய்யப் பெற்ற பன்னிரு திருமுறைகளும் தோத்திரங்கள் ஆகும். மெய்கண்டார் முதலாகிய அருளாசிரியர் அறுவர் அருளிச்செய்த பதினன்கு சித்தாந்த நூல்களும் சாத்திரங்கள் எனப்படும்.

சைவசித்தாந்த சாத்திரங்கள் விதிக்கும் வாழ்வியல் உண்மைகளை மக்கள் சிந்தித்து உணர்ந்து போற்றுதல் வேண்டும்.

நல்வினை தீவினைகளாகிய இருவினைகள், இவற்றின் பயன் இவைகளை இளைஞர் சமுதாயம் எண்ணிப்பார்த்து உண்மை உணரவேண்டும். இவற்றையே மேற்போக்காகப் பார்த்து அவற்றையும் அவற்றின் பயனை நிர்ணயிக்கும் விதியையும் இல்லை என்று மறுத்தல் பொருந்தாது. தோட்டங்களில் நாம் கீரை, கத்தரி, வாழை, தென்னை, பனை முதலியவற்றைப் பயிரிடுகிறோம். கீரை ஒருமாதத்தில் பயன்தரும். கத்தரி மூன்றுமாதத்தில் பயன்தரும். வாழை ஓர் ஆண்டில் பயன்தரும். தென்னை ஐந்து ஆண்டில் பயன்தரும். பனை முப்பது ஆண்டில் பயன்தரும். அது போல நாம் செய்யும் நல்வினைகள் உடனுக்குடனும் தீவினைகள் காலப்போக்கிலும் நமக்கு நன்மை தீமைகளை விளைவிக்கின்றன.

கடவுளைக் காட்டு என்பது எளிதான கேள்வி. அருளாளர்களும் ஞானிகளும் கூட உணர்ந்தும் உணர முடியாமல் இருக்கும் அப்பரம்பொருளை அனுபவித்தறியலாமே தவிர முற்றிலும் காணுதல் என்பது இயலாது. உணர்ந்தார்க்கு உணர்வரியோன் என்று கூறுகிறார் மணிவாசகர். திருவாசகத்தில் திருவண்டப்பகுதியில் 'கண்ணால் யானும் கண்டேன் காண்க; சிவனென யானும் தேறினன் காண்க' என்று கூறிய மணிவாசகர் திருப்பள்ளியெழுச்சியில் 'கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை' என்று கூறுகிறார். இவ்விரு தொடர்ப்பொருள்களும் முரண்பாடுடையன அல்ல. இரண்டிலும் உண்மை இருக்கிறது. கண்ணால் கண்டது உண்மை. ஆனால் அவன் இயல்பை முற்றிலும் கண்டது இல்லை. இதனை விளக்கும் ஒரு உவமையை உய்யவந்த தேவநாயனார் திருக்களிற்றுப்படியாரில் கூறுகிறார். கடலில் நீராடும் ஒருவன் கடலைக் காண்கிறான். கடற்கரையில் வாழும் மக்கள் நாடோறும் கடலில் பலகாலும் ஊடாடுகிறார்கள். அவர்கள் கடலை முற்றிலும் கண்டார்களா? கடலின் ஆழம், அகலம், விளைபொருள்கள் ஆகிய அனைத்தையும் அவர்கள் அளந்தறிவார்களா? அதுபோலத்தான் கடவுளை முற்றிலும் கண்டவர்கள் இல்லை என்று கூறுகிறார் உய்யவந்த தேவர்.

> கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
> கடலளக்க வாராதாற் போலப் — படியில்
> அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்
> கருத்துக்குச் சேயனுக் காண்.

இவ்வாறு தோத்திர சாத்திரங்கள் நமக்கு எழும் ஐயங்களை அகற்றி நாம் கடவுளை உணர்ந்து உய்யும் வழிகளைக் கூறுவன. சமயாசாரியர்கள் தலங்கள் தோறும் சென்று இறைவனைப்பாடி சமுதாயத்தைப் பண்படுத்தியவர்கள். அவர்கட்குப் பின்

தோன்றிய சந்தானசாரியர்கள் தாம் இருந்த இடத்தில் இருந்தே தம்மை நாடி ஓடிவரும் தக்கவர்களுக்கு உண்மைப் பொருள்களை உணர்த்தியவர்கள். கரம்பு நிலத்தை நஞ்சை நிலமாக்கி விளைவு கண்டவர்கள் சமயாசாரியர்கள் என்றும் அவர்கள் விளைத்த பயனை ஒழுங்குற வகைப்படுத்தியும் தொகைப்படுத்தியும் முறை செய்தவர்கள் சந்தானசாரியர்கள் என்றும் கூறலாம்.

தோத்திர ஆசிரியராகிய ஞானசம்பந்தர் மூவாண்டில் சிவஞானம் பெற்றார். சாத்திர ஆசிரியராகிய மெய்கண்டார் ஈராண்டில் சிவஞானம்பெற்றார். மெய்கண்டாரின் தந்தை திருப்பெண்ணாகடத்தில் வாழ்ந்த ஒரு குறுநில மன்னர். அச்சுத களப்பாளர் என்பது அவர் பெயர். இன்றும் களப்பாளர்மேடு என்ற ஒரு இடம் அங்குள்ளது. அண்மையில் அங்கு மெய் கண்டாருக்கு ஒரு கோயில் எழுப்பிச் சிறந்த முறையில் வழிபாடு கள் முதலியன செய்வித்து வருகின்றனர். அச்சுத களப்பாளர் மகப்பேறின்றி வருந்தி அவர் தம் குலகுருவாகிய அருணந்தி தேவரிடம் தம் மனக்குறையை விண்ணப்பித்தார். அருணந்தி தேவர் கல்வி கேள்விகளில் வல்லவர். சகலாகம பண்டிதர் எனப் போற்றப்பெற்றவர். களப்பாளரின் வேண்டுகோளை நிறைவேற்றித்தர விரும்பிச் சிவபூசை முடித்துத் திருமுறையில் கயிறுசாத்திப் பார்த்தார். திருவெண்காட்டுத் திருப்பதிகத்தில்

“ பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளம்நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே ”

என்ற பாடல் உதயமாயிற்று. அச்சுத களப்பாளர் மகிழ்ந்து தம் துணைவியாருடன் திருவெண்காடு சென்று முக்குளநீராடி இறைவனை வழிபட்டார்; மெய்கண்டார் திருவவதாரம் செய்தார். இன்றும் இத்தலத்தில் முக்குள நீராடி மக்கட் பேற்றைப் பெற்று வருவார் பலராவர். ‘ சுவேதனப் பெருமாள் ’ என்று பிள்ளைமைப் பெயரிடப்பெற்று வளர்ந்துவரும் நிலையில் குழந்தையைத் தாய் மாமன் திருவெண்ணெய்நல்லூருக்கு எடுத்துச் சென்றுவளர்த்து வந்தார். 2 ஆண்டு நிரம்பியது. குழந்தை வீதியில் விளையாடிக் கொண்டிருந்தது.

கயிலாயபரம்பரையில் உபதேசம் பெற்ற பரஞ்சோதி மாமுனிவர் வான்வழியே செல்பவர் தம் தேர் ஏதோஒர் ஆற்ற லால் தடைப்பட்டுநிற்பதை உணர்ந்து, கீழே உற்று நோக்கினர். சுவேதவனப் பெருமாள் சாமுசித்தராய் எல்லாக்கலை ஞானங் களும் நிரம்பிய நிலையில் இருப்பது தெரிந்தது. திருவருட் செயலை நினைந்து வியந்து உடனேகீழே இறங்கி வந்து கயிலாய

பரம்பரை நிலவுலகில் தழைத்துச் சிறப்பதற்கு இக்குழந்தையே ஞானகுருவாக விளங்குதற்குரியவராதலை உணர்ந்தார். தாம் பெற்றஅருள் நலங்களைப்பெற்றுமண்ணுலகமக்கள் கடைத்தேறும் பொருட்டு அக்குழந்தைக்குச் சிவஞானேபதேசம் செய்து 'மெய் கண்டார்' எனத் தீக்ஷா நாமம் சூட்டிச்சென்றூர். மெய்கண்டார் சிவஞானச் செம்மலாக விளங்கினர். தத்துவக்கடலாக விளங்கும் சிவஞான போதத்தைப் பன்னிரு சூத்திரங்களாக நாற்பது வரி களில் அருளிச்செய்தார். தம்மை வந்தடைந்த அன்பர்கட்டு அதன் மெய்ப்பொருள்களை உணர்த்திக்கொண்டு எழுந்தருளி விளங்கியிருந்தார். மெய் கண்டதேவரின் அருள்விளக்கம் உலகெங்கும் பரவியது.

அருணந்திதேவரும் இதனை அறிந்தார். தம்பால் கயிறு சார்த்திப் பார்க்கப்பெற்று அதன்வழித் தோன்றிய பிள்ளை தம்மைவந்து காணவில்லையே என்று எண்ணினர் இந்நிலையில் தாமே செல்வதெனக் கருதித் திருவெண்ணெய்நல்லூர் சென்று அங்கும் தம்மைவந்து அவர் காணுமையால் தம் சீடரில் ஒருவரை அவரிடம் அனுப்பினர். சென்ற சீடர் மெய்கண்டாரின் உபதே சங்களில் ஈடுபட்டுத் தம்வயமிழந்து அங்கேயே தங்கினர். இவ் வாறே சென்ற பலரும் திரும்பாதமையால் மெய்கண்டார் உறையும் திருமடத்திற்குத் தாமே சென்றூர். அப்பொழுது மெய்கண்டார் பாசஇலக்கணங்களில் ஆணவத்தின் தன்மைகளை அடியவர்களுக்கு உணர்த்திக்கொண்டிருந்தார். இங்கேஒன்று குறிப்பிடவேண்டும்.

ஆசாரியர்களாக இருப்பவர்களைப் பற்றி இதுபோன்று கூறு தல் கூடாது என்றூலும், வரலாற்றைச் சிந்திக்கும் வகையில் இதைச் சொல்லத்தான் வேண்டியுள்ளது. எவ்வளவு கல்வி நிரம்பியவர்களாக இருந்தாலும் குருவருள் இல்லையானல் ஞானத்தை அடைய முடியாது அல்லவா ? ஆசாரியனின் அருள் கிட்டும் வரை ஆணவம் என்ற குறை உடையவராகத்தான் அருணந்திதேவர் இருந்தார். மெய்கண்டாரைச் சிறு குழந்தை என்றெண்ணி ஆணவத்தின் சொரூபம் யாதுஎன்று வினவினர். மெய்கண்டதேவர் இவரது பரிபாக நிலையை உணர்ந்து தமது கைவிரலால் அவரையே சுட்டி, தம் திருக்கண்களால் நோக்கி னர். ஆசாரியரது அருள் நோக்கம்பட்ட அளவில் ஆணவக் குறை அகன்றது. அடியற்ற மரம்போல் அவர் திருவடிகளில் வீழ்ந்து பணிந்து அருள்நலம் பெற்றூர் அருணந்தி தேவர்.

குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் 'திருநோக்கால் ஊழ்வினையைப் போக்கி' என்று கூறும் தொடர் விளக்கமாக இந்நிகழ்ச்சி அமைந்து விளங்குகின்றது. குமரகுருபரர் நமது

தருமையாதீனத்தின் நான்காவது குருமூர்த்திகளிடம் 'ஐந்து பேரறியும் கண்களேகொள்ள ' என்ற பெரிய புராணப் பாடலுக்கு அனுபவப் பொருள் கேட்கப்பெற்று அவ்வாறே ஆசாரியரின் அருள்நோக்கால் ஆட்கொள்ளப்பெற்றவர். அருணந்தி தேவர் சக்ஷிதீக்ஷையிலும் குமரகுருபரர் வாசிக தீக்ஷையிலும் ஆட்கொள்ளப்பெற்றனர் என்பதை இங்கு நாம் உணர்தல் வேண்டும்.

உலகில் உயிர்கள் கேவலம் சகலம் சுத்தம் என்ற மூவகை நிலையில் உள்ளன. ஆணவத்தில் மட்டும் அழுந்தி நிற்றல் கேவலநிலை என்றும், அதனோடு மாயை கன்மங்களும் சேர்ந்து பிறப்பிறப்பில் உழல்வது சகலநிலை என்றும், மும்மலங்களும் நீங்கி இறைவனை அடைவது சுத்தநிலை என்றும், கூறப்படும். உயிர்கள் மாணிக்கம்போல - வைரம்போல உள்ளவை. அவற்றிற்குப் பட்டை தீட்டி விளங்கச்செய்பவனே ஆசாரியன்.

சைவசித்தாந்த தத்துவ உணர்வு, தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன்னே தோன்றிய மெய்யுணர்வு. சங்க நூல் களிலும் சிறப்பாகத் திருக்குறளிலும் இதனை அறியலாம். திருமுறைகளில் அவை சிறந்து காணப்படுகின்றன. சிறப்பாகத் திருஞானசம்பந்தர் பாடலைக்குறிப்பிடலாம். மண், புனல், அனல், கால் வெளி எனப் பூதங்கள் 5. மெய் வாய் கண் மூக்கு செவி என அறிகருவிகள் 5. வாக்கு, கை, கால், எருவாய். கருவாய் எனச் செயற்பொறிகள் 5. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என தன் மாத்திரைகள் 5. இவை புலனாகப் புறத்தே விளங்கும் தத்துவக் கூறுகள். மனம். புத்தி, சித்தம், அகங்காரம் எனப் புலனாகாது அகத்தே விளங்கும் அந்தக்கரணங்கள் 4. இவ்விருபத்துநான் கும் ஆன்மதத்துவங்கள். இவற்றை

"புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரணம்நான்காய்
அவையவைசேர் பயனுருவாய் அல்லஉரு
வாய்நின்றான் அமரும்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவணெறி கற்போற்சுனையில் கரைசேரப்
புள்ளிரியும் கழுமலமே."

என்று கூறுகிறார் ஞானசம்பந்தர். இறைவன் உயிர்கட்கு உடலையும், கருவிகளையும் உலகங்களையும் அனுபவங்களையும் தந்தருளுகின்றான். இவற்றைத் தனு கரண, புவன, போகம் என்பர். உடல் 'மாயா இயந்திர தனு' என்றும் பேரொளியாகிய பரம்பொருளைக் காணுதற்கு உயிர்கட்குத் தரப்பெற்ற விளக்கு

என்றும் கூறப்படும். எத்தனைவிதமான நுண்பொறிகளோடு இறைவன் இவ்வுடலைப் படைத்துள்ளான் என்பதை எண்ணிப் பார்த்தால்தான் இறைவனது கருணை புலப்படும். பெற்றவள் அன்னைதான் என்றாலும் அவனது அருளால்தான் நமக்குப் பிறப்பு அமைகிறது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற சொல் வழக்கில் உள்ள உண்மையை உணர்தல் வேண்டும்.

'ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே, சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே, நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே' என்று கூறும் புறநானூற்றில் தாய் தந்தையர் கடமை தெரிகிறது. மாதா, பிதாவையும், பிதா, குருவையும், குரு, தெய்வத்தையும் காட்டுதல் வேண்டும். இறைவன் மக்கள் அனைவரும் இன்புற்றிருக்கச் செல்வங்களைத் தந்துள்ளான். செல்வத்தைப் பேணிப் போற்றாதவர் வருந்தநேர்ந்தால் வழங்குவதற்குச் சிலரிடம் செல்வத்தைத் தந்துள்ளான்.

" இரப்பவர்க்கீயவைத்தார், ஈபவர்க்கு அருளும்வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார் "

என்பது அப்பர் திருவாக்கு. 'செல்வத்தின் பாதுகாவலர்களாக மட்டும்தான் செல்வந்தர்கள் விளங்கவேண்டும்' என்று ஈசாவாஸ்ய உபநிடதம்கூறுகிறது. செல்வத்தை ஒரளவுமட்டுமே அனுபவிக்க உரிமையுண்டு. ஒல்லும் வகையால் அறவினை செய்தல் செல்வர்களின் சீரிய கடமையாகும்.

இவ்வாறு சமய நூல்கள் வாழ்வியல் அருளியல்பற்றிக் கூறும் கருத்துக்களை உணர்ந்து கடைப்பிடித்து ஒழுகுதல் இன்றியமையாதது.

இக்கல்லூரி துறவியார் ஒருவர் வழங்கிய இடத்தில் தோன்றி வளர்ந்து, துறவியார் ஒருவராலேயே வளர்க்கப்படுகிறது தோன்றுதற்குத் துணைசெய்தவரும் துறவியார்; வளர்ப்பவரும் துறவியார். இங்குப்பயிலும் மாணவர்கள் தியாக உணர்வோடு பயின்று நாட்டுக்கும், மொழிக்கும், சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் பயன்படவேண்டும். புறநானூற்றுப் புலவர் ஒருவர் கூறியதுபோல, 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக விளங்குதல் வேண்டும். தெய்விகப் பேரவையின் சார்பில் இயங்கி வரும் இக்கல்லூரி சிறந்ததொரு பல்கலைக் கழகமாக வளர்ந்து சிறக்க உள்ளது. பேரவைக் கல்லூரி, பெயரும் புகழும் பெற்றுச் சிறக்கவும், இங்குப் பயிலும் மாணவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மேம்பட்டுத் திகழவும், ஆசிரியர்கள் மற்றும் கல்லூரிக் குழுவினர், ஊர்ப் பொதுமக்கள் அனைவரும் நலம்பல பெற்று நீடு வாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்தித்து நிறைவு செய்கிறேம்.

# மகாசிவராத்திரி வரலாறு

தொல்லையவல் வினைகழித்துத் தரும்சோம
உரம்ஆ திரைநோன் பன்றிப்
புல்லியநல் மாமகேச் சுரம்சிவராத் திரி முறையிற்
பொருந்த நோற்கப்
பல்வினையுந் தொலைத்திடுகே தாரமண விரதம்இவை
பரமன் நோன்பு
கொல்லுறுசூற் படைவிரத மெனும் எட்டும்
சிவவிரதம் குணிக்குங்காலே.

[உபதேச காண்டம்]

தோற்றுவாய் : சிவமே பரம்பொருள் : சிவசம்பந்த முடையதே சைவம்; அதனை அநுட்டிப்பவர் சைவர். சிவ பரம்பொருளை அடைய வழிகள் நான்கு உண்டு எனச் சாத்திரம் பேசும். அவை, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சரியையாவது விடியற்காலத்தே நீராடி நீறணிந்து சிவாலயத்திற்குச் சென்று கோயிலைத் திருவலகுகொண்டு சுத்தம்செய்தல், திருமெழுக்கிடுதல், புட்பம் பறித்து மாலைகட்டிக் கொடுத்தல், திருவிளக்கேற்றல், சிவபெருமான் புகழைப் பாடுதல், சிவ விரதங்களை விதிப்படி அநுட்டித்தல், சிவ புராண படனம், சிவ புராண சிரவணம் முதலியனவாம். கிரியையாவது சிவலிங்க பூஜையை முறைப்படி செய்தல். யோகமாவது இயமம், நியமம் முதலியன. விரதங்களை அநுட்டித்தல், சரியை முதலிய மூன்றினும் உண்டு.

விரத வரலாறு : விரதம் என்றால், உயிர் நன்னெறி நிற்றற் பொருட்டுச் சிலநியமங்களைக் கடைப்பிடித்தல். அவற்றுள் உண்டிசுருக்கல் அல்லது உண்ணாமை முதலாவதாகும். பட்டினியால் நோயின்றி வாழலாம். இதனை மேனாட்டவரும் அவ்வப்போது கைக்கொண்டு வருகின்றனர். எனவேதான், நாமும் நம் உடம்பை நோய் இல்லாமல் காப்பாற்றிக்கொள்ள நமக்கும் நம் பெரியோர்கள் விரதங்களை ஏற்படுத்தினார்கள். மேனாட்டவர் பட்டினி கிடக்கும்போது கடவுட் சிந்தனைக்கு இடமில்லை. ஆனால், நம் நாட்டவரோ பட்டினி கிடக்க நாள்களை ஏற்படுத்தி, அவ்வந்நாட்களில் நம் ஆண்டவனையும் வழிபட ஏற்பாடு செய்துள்ளார்கள். இதனால் உயிருக்கும் இலாபம்

உண்டு; உடம்பும் நோயின்றித் திகழும். இது விஞ்ஞான சாத்திரத்துக்கும் ஒத்ததாகும்.

தெய்வம் ஒன்றே; தெய்வ பேதங்கள் பல. எனவேதான், விரதங்களும் பலவாயின. சிவபெருமானுக்குரிய விரதங்கள் எட்டு என்று உபதேச காண்டம் கூறும். இவற்றுள் ஒன்று சிவராத்திரி. இதனை மட்டும் இங்கு விரித்துக் கூறுவாம். "மழவிடை யேறுகைத்திடும் எம்மான், சென்ற சிந்தையில் திருவுளம் உவந்தது தேவரும் முறை நோற்பார், நன்றெனுஞ் சிவராத்திரியில் இது நோற்பவர் நறுங்கொன்றைப், பொன் திகழ்ந்திடு சடைமுடிக் கயிலையம் புனிதனிற்றெழ நிற்பார்."

சிவராத்திரி வகை: இச்சிவராத்திரியும் ஐவகைப்படும். அவையாவன ; நித்திய சிவராத்திரி : மாத சிவராத்திரி : யோக சிவராத்திரி பட்சசிவராத்திரி : வருடத்திற்கொரு முறை வரும் மகாசிவராத்திரி (மாக சிவராத்திரி) என்பன.

I. நித்திய சிவராத்திரியாவது, ஒவ்வொரு மாதத்திலேயும் வரும் வளர்பிறை. தேய்பிறைச் சதுர்த்தசி நாட்கள் 24.

II. மாதசிவராத்திரி தேய்பிறைச் சதுர்த்தசி நாட்கள் 12.

III. யோக சிவராத்திரி :- சோமவாரம் சூர்ய உதயம் முதல் 10 நாழிகை வரை சதுர்த்தசி இருக்குமாயின், அது யோக சிவராத்திரியாகும்.

IV. பட்ச சிவராத்திரி :- தைமாதம் தேய்பிறை பிரதமை தொடங்கி 13 நாட்கள் விரதமிருந்து 14ம் நாள் விரதம் பூர்த்தி செய்வது.

V. மகாசிவராத்திரி அல்லது மாக சிவராத்திரி :- மாக மாதம் அல்லது மாசி மாதத்தில் வரும் தேய்பிறைச் சதுர்த்தசி.

இன்னும் இம்மகாசிவராத்திரி உத்தமோத்தமம் என்றும், உத்தமம் என்றும். மத்திமம் என்றும் அதமம் என்றும் நான்கு வகைகளாகவும் பேசப்பெறும்.

1. சூரியாத்தமனம் வரை திரயோதசியிருந்து பிறகு சதுர்த்தசி வந்து மறுநாள் பகல்வரை இருக்குமாயின் அது உத்தமோத்தமம்.

2. சூரியாத்தமனத்தின் பின் இரவின் 10 நாழிகைக்கு முன் சதுர்த்தசி வந்தால், அது உத்தமமாகும்.

3. காலை தொடங்கி மறுநாள் சூர்யோதயம் வரை வரும் சதுர்த்தசியும், சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்வரும் சதுர்த்தசியும் இரவின் 10 நாழிகைக்குப்பின் வரும் சதுர்த்தசியும் மத்திமம்.

4. இரவு 20 நாழிகை வரை சதுர்த்தசியிருந்து பிறகு அமாவாசை வந்தால் அது ஆகாது. (திரயோதசியும் சதுர்த்தசியும் கூடிய இரவு சிவலிங்க சொருபம் என்பர் ஆன்றோர்) இது சந்நியாசிகட்கும், வைதீகர்கட்கும் உதவும்.

அமாவாசையுடன் திருவோணம் கூடினுல் உத்தமமாகும்.

அநுட்டிக்கும் முறை :- முன்னுள் இரவு உணவு இன்றிப் பட்டினி கிடந்து சிவராத்திரி தினத்தன்று காலையில் நீராடி நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு சிவாலய தரிசனம் செய்து, சிவபுராண படன சிரவணஞ் செய்துகொண்டு உணவின்றி இருக்கவேண்டும். சிவபூசை யுடையவர்கள் அன்றிரவு நான்கு சாமங்களிலேயும் பூசை செய்யவேண்டும். நித்திரையின்றியும் இருக்கவேண்டும். சிவபூசை ஏற்றுக்கொள்ளாதவர்கள் சிவ லிங்கமுள்ள சிவாலயத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் நான்குகால் பூசைகளையும் ஊண் உறக்கமின்றித் தரிசித்து அநுட்டிக்க வேண்டியது. மறுநாட் காலை சூரிய உதயத்திற்கு முன் நீராடி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு உறவினருடனும், அடியார்களுடனும் பாரணம் செய்தல் வேண்டும். உடம்பிலே உயிர் தங்காது என்று தோன்றினுல் நீர்உட்கொள்ளலாம். அது போதாது என்ருல் பால் சாப்பிடலாம். அதுவும் போதாதெனின், பழம் இனிப்பு வகையான பட்சணங்களை உட்கொள்ளலாம். இவ்வகை அதமம் எனப்படும். ஆனுல்உடம்பில் பலம் இல்லாதவர்களும், நோயுடையவர்களும், குழந்தைகளும் கர்ப்பப்பெண்களும் இந் நியதியுடன் விரதாநுட்டானம் செய்ய வேண்டியதில்லை. ஏன்? "நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை" ஆதலால்.

## சிவபூசை செய்யும் முறை :

| சாமம் | அபிடேகம் | பத்திரம் | புட்பம் | நிவேதனம் | தீபம் | தோத்ரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பஞ்சகவ்யம் | வில்வம் | தாமரை | பொங்கல் | அகில் | ருக்வேதம் |
| 2. | பஞ்சாமிர்தம் | துளசி | தாமரை | பாயசம் | சந்தனம் | யஜுர் வேதம் |
| 3. | தேன் | 3 இதழ் வில்வம் | சாதிபுட்பம் | எள்ளன்னம் | பச்சை கற்பூரம் | சாமவேதம் |
| 4. | கருப்பஞ் சாறு | நந்தியா வர்த்தம் | நீலோத் பலம் | சுத்தான் னம் | குங்குமப்பூ | அதர்வண வேதம் |

நான்கு சாமங்களிலும் சிவாலயத்திற்குச் சென்று சிவலிங்க தரிசனம் செய்ய இயலாதவர்கள் இரண்டாஞ் சாமத்திலாவது (லிங்கோத்பவகாலம்) கட்டாயம் சிவதரிசனஞ் செய்யவேண்டும்.

சிவராத்திரி வரலாறு :- இதன் வரலாற்றைச் சிவாகமங்கள் பல வகையாகப் பேசும். ஒன்று மட்டும் இங்கு சிந்திப்போம். பேரூழிக்காலம் வந்தது. உலகமும் உயிர்களும் ஒடுங்கின. சூர்ய சந்திரரும் ஒடுங்கினர். எங்கும் இருள்மயம், சப்தமுமில்லை. உயிர்களிடம் கருணைகொண்ட உமாதேவியார் ஒளிமயமான சிவலிங்க பூசனையை நான்கு சாமங்களிலும் செய்து ஒளியைப் பரப்பிப் புனர்சிருட்டி செய்தாள் என்று பேசும் ஒரு ஆகமம். இரண்டாம் சாமத்தில் சிவலிங்கத்தினின்றும் சிவபெருமான் வெளிப்பட்டு அம்மையின் சிவபூசைக்கு வியந்து வேண்டும்வரம் யாதெனக் கேட்க உமையம்மையும் நாம் பிழைக்கும்வண்ணம் அந்த இராத்திரி சிவராத்திரியாக இருக்கவேண்டுமென்றும், அந்நாளில் சிவபெருமானை விதிப்படி வழிபடுவோருக்குச் சிவ சாயுச்சியத்தைக் கொடுக்கவேண்டும் என்றும், அவ்விரவு சிவன் பெயராலேயே "சிவராத்திரி" என அழைக்கப்படவேண்டு மென்றும் வேண்டி வரம்பெற்றுள். மற்றும் சருவ சங்காரகாலத் திற்குப்பின் உலகத்தோற்றத்திற்குச் சிவபெருமான் பிரம விட்டுணுக்களின் முன் சோதிப்பிழம்பாய்த் தோன்றியருளியதே சிவராத்திரி என்பதும் சொல்லப்படுகின்றது.

வாழிய சைவம்! வளர்க நம் பண்பு!!

---

குறிப்பு :— நான்கு சாமங்களிலும் பன்னிரு திருமுறைகளை ஓதுக.

ஆசையறுய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்—சீ சீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய். —சிவபோகசாரம்.

---

## உண்மைச் சுற்றம் எது ?

பிறப்பு வகையால் வரும் சுற்றத்தார் அனைவரும் உண்மைச் சுற்றமாகார். சில நேரங்களில் அவர்களே பெரும் பகையாகவும் மாறிவிடுவர். பின். உண்மைச் சுற்றத்தார் யார் ?

நல்லறமே — தந்தை
நிறை (அறிவு) — தாய்
நன்குணரும் கல்வி — தோழன்
துணிவு — தம்பி

—அறநெறிச்சாரம்.

# மாகேசுவர பூஜை

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

சைவசீலங்களுள் மாகேசுவரபூஜை மிகச்சிறந்தது. மாகேசுரர்கள் சிவவிரதிகள், தபோதனர்கள், சிவயோகியர், சிவஞானியர் என நால்வகைப்படுவர். அவருள் சிவவிரதிகளுக்கும்தபோதனர்களுக்கும் சீரகச்சம்பா அல்லது இராஜசாலி அன்னமும் முக்கனி, நறுநெய், பணியார வகைகள் இவைகளுடன் அமுது செய்வித்தோர்கள், நூறுயிரம் அந்தணர்க்கு அன்னமிட்ட பலத்தினும் மிகுந்த பலனை அடைவார்கள்.

சிவயோகியர்களுக்கு அங்ஙனம் அன்னமிட்டவர்கள் இருபத்தோரு தலைமுறை முன்னர் பாவங்களைச் செய்து நரகத்தை அடைந்தோரைக் கரையேற்றி சிவலோகத்தில் சேர்ப்பிப்பார்கள். அதுவுமன்றி நல்ல பிள்ளைகளைப் பெற்று மனமகிழ்ச்சியோடு வாழ்வார்கள். ஒரு சிவயோகி பிச்சையெடுக்க எண்ணி ஓர் அன்பர் வீட்டுவாயிலை அணுகுவார் ஆனல் அந்தக்கணமே இருபத்தோரு தலைமுறை நரகஞ் சென்றவர்கள் அத்தனைபேரும் கரையேறி விட்டோம் கரையேறி விட்டோம் என்று களித்து ஆனந்தக்கூத்தாடுவார்கள். சிவயோகிக்குச் செய்யும் பூசையையே சிவபெருமானும் மற்றுள்ள தேவர்களும் பிதுரர்களும் ஏற்று அருள் வழங்குவார்கள். சிவயோகியைப் பூசித்தற்குப் பயன்படும் சந்தனம் முதலிய அஷ்ட கர்ணங்களும் கோட்டுப்பூ முதலான நால்வகைப் பூக்களும் நெல் முதலிய சாதனங்களும் சிவபெருமானையே சேர்வனவாம். சிவயோகிகளை வணங்கியோரும், அவர்களுக்குப் பணிவிடை செய்தோரும், அவர்களைத் தியானம் செய்தோரும் பிராரத்தம் ;முதலான மூவகை வினைகளிலிருந்தும் நீங்கி சிவலோகத்திற்குச் சென்று என்றும் இன்பம் பெருக இருப்பார்கள்.

ஆதலால் சிவபெருமானே மக்களின் வழிபாட்டினை அறிய சிவயோகியாகவும், சிவஞானியாகவும் எழுந்தருளுகிருன். நாம் இவர் அவர் என்ற வேற்றுமை பாராட்டாமல் இறைவனைப் பூசிப்பது போலவே பூசித்தல் வேண்டும். அவர்கள் தூய்மையோடு வந்தாலும், தூய்மையற்று வந்தாலும், இழி பிறப்போராய் இருந்தாலும், உயர்ந்தோராய் இருந்தாலும், ஒழுக்கமுடையவர்

ஒழுக்கமிலாதவராக இருந்தாலும் விரதமுடையவர் விரதமில்லாதவர் எப்படியிருந்தாலும் சிவபக்தியுடையராயின் அவர்களை வழிபடவே வேண்டும். சிவஞானிகளை நிந்தித்தோரும்-நிந்தனைகளைக் கேட்டோரும் நிந்திக்கும்படி ஏவினேரும், அதற்குடன் பட்டவர்களும் ஆகிய இவர்கள் கற்பகோடிகாலும் எரிவாய் நரகத்து வீழ்ந்து வருந்துவார்கள். ஆதலால் உறவும், பகையும் இல்லாத சிவஞானிகளை நிந்தித்தல் ஆகாது. நிந்திப்பவர்கள் எரிவாய் நரகத்தும் மற்றுள்ள நரகத்தும் பன்னூறு ஆண்டு காலம் வீழ்ந்து வருந்துவர்; இவர்களுக்கு எவரும் துணைசெய்யார்.

பொறிபுலன்களை அடக்கிய சிவஞானிகளுக்கு நிந்தை செய்தோர்கள் எரிவாய் நரகத்து இடர்ப்படுவார் ஆகையால் உலகில் உள்ள மக்களே! நீங்கள் சிவஞானிகளை நிந்திக்காதீர்கள். பூவினுல் போற்றுங்கள். இட்ட கட்டளையைத் தவருமல் போற்றுங்கள் சிவஞானிகளை சிவனுகவே எண்ணுங்கள்.

எவன் சிவத்தியானம் இல்லாதவனே, எவன் பிறப்பு இறப்புக்குஅஞ்சாதவனே, எவன் புண்ணிய பாவத்திற்குப் பயப்படாதவனே, அவன் மாகேசுவரபூசைக்கு ஏலாத அசத்பாத்திரமாவான் என வேதங்கள் ஆகமங்கள் அறிவிக்கின்றன. அசத்பாத்திரமாய் உள்ளவனுக்குச்செய்தபூசை புண்ணியத்தைக்கொடுக்காது; அவர்களுக்குச் செய்த பூசை சுடாத பச்சை பண் சட்டியில்விட்ட நீர்போல உடனே அழியும்.

களர் நிலத்தில் விதைத்த விதை போலவும், அக்கினியையன்றி சாம்பலில் செய்த ஓமத்தைப் போலவும், சிவஞானியர் அல்லாதார்க்குச் செய்தபூசை அலிப் புணர்ந்த பெண்போலவும் ஒருவகையிலும் பயன் பெருதொழியும். அசத் பாத்திரனுக்குப் பூசை செய்வோமாளுல் அச்செயல் இரும்புக்கட்டியாலாகிய தோணியில் பல சரக்குகளை ஏற்றிக் கொண்டு கடலைக் கடந்து கரைசேருவதுபோலாம்.

இருவரும் மக்கள் தாமே; ஒருவரைப் பூசித்தால் உயர்வும், ஒருவரைப் பூசித்தால் தாழ்வும் வரக் காரணம் என்ன என்று கேட்கலாம். இரும்புக் கட்டியைத் தண்ணீரில் போட்டால் அமிழ்ந்து போகிறது. அதையே காய்ச்சி தோணியாக்கித் தண்ணீரில் இட்டால் பல பண்டங்களையும் நம்மையும் ஏற்றிக் கொண்டு அக்கரை செல்லுகிறது. அதுபோல சதாசிவ சிந்தனையோடு நல்லொழுக்கமும், சிவதீட்சையும் பெற்ற சிவஞானிகள், தம்மைப் பூசித்தவர்களைப் பிறவிக் கடலிலிருந்து

கரையேற்றுகிறார்கள். மற்றவர்கள் தாமும் அழிகிறார்கள்; தன்னை அடுத்தவர்களையும் அழிக்கிறார்கள்.

இவன் சிவஞானி இவன் அவஞானி என்ற வேறுபாடு கருதாமல் எல்லோரையும் சிவஞானியாகவே பாவித்துப் பூசிப்போர்க்கு இத்தகைய வேறுபட்ட பாவங்கள் விளையாவாம்.

எவனுக்குச் சிவலோகம் அடைய வேண்டுமென்ற ஆசையோ அவன் உச்சிக்காலத்து வந்தோர்கள் அனைவருக்கும் வேறுபாடு கருதாமல் அன்னமிடல் வேண்டும்; இதனால் நினைத்த காரியம் நிறைவேறும்.

யார் யார் கொடுக்கத் தகுதியுடையோர்?

கொடை, வணக்கம், உறவு, கருணை, பொறுமை என்ற ஐந்து குணமுடையோரே வள்ளல் ஆகத் தக்கவர்கள்; சிவஞானியர் எதனையும் விரும்பிக் கேட்கமாட்டார் ஆகையால் நாமே அவரை அணுகி அடியேன் தரும் பொருளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஏற்பித்தருளல் வேண்டும். சிவஞானிகளைப் பூசித்தவர்கள் பரகதி அடைவர். அவஞானிக்குக் கொடுத்தோர்கள் பொருளை இழந்ததோடு நரக உலகம் எய்துவார்கள். எவனுக்கு மேல் உலகம் செல்ல விருப்பமோ அவன் அடியவர்களுக்கு அஞ்சி அருச்சித்து இன்சொல்லும் இன்முகமும் காட்டி கையில் கிடைத்ததைக் கொடுக்கவேண்டும். தன்னையணுகி இரக்கும் இரவலனை இவன் அற்பன் என்று இகழாமல் அவனைப் பெரிய செல்வனாகக் கருதியே கொடுக்கவேண்டும். செல்வர்க்குக் கொடுப்பவர்கள் வட்டிக்குப் பொருள் கொடுப்போர் போல ஊதியம் கருதிக் கொடுப்பவர்களாம். ஆதலால் வறியோர்க்குத் தானம் செய்தல் வேண்டும். [வளரும்.]

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

**ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம். திருப்பனந்தாள்.**

செஞ்சடையப்பர் திருக்கோயிலைத் தரிசிக்கும் பெரும்பேறு கிடைக்கப்பெற்றேன். அமைதியையும், தூய்மையையும் தெய்வீக உணர்ச்சியை உள்ளத்தில் எழுப்பும் தன்மையையும் ஒவ்வொருவரும் அனுபவத்தில் அறியலாம். இக்கோயிலைக் கண்காணிக்கும் அனைவருக்கும் என் நன்றி கலந்த வணக்கங்கள்.

(ஒ-ம்.) வ. சிவசுப்பிரமணியம்,

27—1—73. ( C. A. O. / H. R. & C. E. Dept. Madras - 34 )

# அருள்நந்தி சிவத்தின் அருளுள்ளம் *

திரு. ந. ரா. முருகவேள் *M. A., M. O. L.*,

**முன்னுரை :**

ஒரு கவிஞன் அல்லது, நூலாசிரியனின் ஞானம், அனுபவம், கொள்கை, பழக்கவழக்கம் முதலியன அவனுடைய நூல்களில் விளங்கித் தோன்றும். கவிஞன் அல்லது நூலாசிரியன் நினைந்தோ நினையாமலோ, அவனுடைய இயல்புகள், மனப் போக்குகள், நோக்கங்கள் முதலியன அவனது நூல்களில் நிழலிட்டுத் தோன்றக் காணலாம். நூலின்போக்கு, நடையமைப்பு, கருத்தழகு, சொல்நலன், சொற்றொடர் அமைப்புத் திறன் முதலியனவற்றைக் கொண்டு, ஒரு நூலாசிரியனின் இயல்புகள் எத்தகையவை என்று, நாம் நுண்ணறிதின் எண்ணியுணர்தல் கூடும். இவ்வுண்மை இலக்கிய ஆராய்ச்சியாளர் அனைவரும் அறிந்ததொன்று.

**செகப்பிரியர் :**

இம்முறைக்குஏற்ப, உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராகிய வில்லியம் செகப்பிரியரின் குணம் கொள்கை அறிவு அனுபவம் வாழ்க்கைமுறை முதலியன, அவர்தம் நூல்களின் வாயிலாகப் புலனாகின்றன என்று ஆராய்ச்சியாளர் பலரும் கூறுவர். செகப்பிரியர் ஓர் ஒப்புயர்வற்ற கவிஞராக மட்டும் அல்லாமல், மிகச் சிறந்த ஒரு பெரும் நடிகராகவும் விளங்கி இருந்தார். அவர் தாம் எழுதிய ‘ அமலாதித்தன் ’ என்னும் நாடகத்தில் டென்மார்க் தேசத்து அரசராகிய கிளாடியசு என்பவரின் ஆவியாகவும் ; ‘ வெனிசு வாணிகன் ’ என்னும் நாடகத்தில் ஷைலக்கு என்னும் யூதனாகவும், ‘ நீங்கள் விரும்புவது போல ’ என்னும் நாடகத்தில் ஆதாம் என்னும் பணியாளனாகவும் வேடந் தாங்கி நடித்து, மிகப் பெரிதும் போற்றப்பெற்றார். அத்தகைய சிறந்த பெரும் நடிகராக விளங்கிய செகப்பிரியர், மனித வாழ்க்கையைப் பற்றித்

---

* சென்னை தியாகராய நகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெறும் சிவஞானசித்தியார் வகுப்பில் விளக்கிய கருத்துக்களைத் தழுவியது.

தம்முடைய கருத்துக்களைத் தமது நடிப்புக்கலை அனுபவமும் பயிற்சியும் புலனாகும்வண்ணம், முறையே "மகபதி" "நீங்கள் விரும்புவதுபோல" "அமலாதித்தன்" என்னும் நாடகங்களில், பின்வருமாறு வெளியிட்டிருக்கக் காண்கின்றோம்.

**வாழ்க்கையும் நாடகமும் :**

(1) "வாழ்க்கை என்பது, ஒரு நடக்கும் நிழலே; மேடையின் மீது தனக்குரிய நேரத்தில் ஓடியாடி உறுமி அலட்டிக்கொண்டு, அதற்குப் பின்னர் கேட்கப்பெறாமல் போகின்ற ஓர் ஏழை நடிகனைப் போன்றது வாழ்க்கை ; ஓர் அறிவிலியால், கூச்சலும் இரைச்சலும் நிரம்பி, குறிக்கத்தக்க கருத்து ஏதுமின்றிச் சொல்லப்படுகின்ற, சுவையற்ற வெறும் கதைபோல்வதே, வாழ்க்கை எனலாம்".

"உலக வாழ்க்கை என்பதுதான்.
உலவித் திரியும் வெறும்நிழலே;
நலமில் வறிய நடிகன்அவன்,
நடந்து குலுங்கி மேடையினில்
சிலவே நேரம் இருந்தொழிவான்;
பின்னர்ச் சிறிதும் செவிக்கணுகான்;
இலகு சுவையின் றறிவிலிசொல்
கதைபோற் பொருளில் வெற்றொலியே" (1)

—ந. ரா. மு.

(2) "இவ்வுலகமே ஒரு பெரும் நாடகமேடை. இதன் கண் வாழும் ஆண்களும், பெண்களும் இந்நாடக மேடையில் வருகின்ற வெறும் நடிகர்களே யாவர். அவர்கள் தத்தமக்கென உட்புகும் வாயிலையும், வெளியேறும் வழியையும் பெற்றுள்ள னர். ஒரு மனிதனே தனக்குரிய நேரத்தில், பலவகைக் கோலங் களில் நடிக்கின்றான். அவனுடைய நடிப்பு, எழுவகைப் படிவங் களாக அமைகின்றது.

---

(1) "Lite is but a walking shadow;. a poor player
That struts and frets his hour upon the stage,
And then is heard no more; it is a tale
Told by an idiot, full of sound and fury,
Signifying nothing"

—William Shakespeare, *Macbeth*

" உலகம் எலாம்ஒரு நாடக
மேடை; ஒருங்கியைந்த
நிலவும்ஆண் பெண்கள் எலாமும்
வெறும்நிழல் போல்நடிகர்;
உலவ வரும்வழி செல்வர்
உண்டு, அவர்க்கு; உற்றொருவர்
பலவகைப் பாங்கின் நடிப்பர்; ஏழ்
வாழ்க்கைப் படிவங்களே " (2)

—ந. ரா. மு.

நடிப்புக்கலைக் குறிப்புகள்:

(3) " நீங்கள் உங்கள் பேச்சுக்களை நயமாகவும் பொருத்தமாகவும் பேசுங்கள். கூச்சலிட்டுக் கத்தாதீர்கள். காற்றை ஈர்வாள் கொண்டு அறுப்பதுபோன்று, கைகளை மேலும் கீழும் ஆட்டிக் குதிக்காதீர்கள். அமைதியாகப் பெருந்தன்மை தோன்ற நடியுங்கள். உணர்ச்சியினைப் புயலும் சூறுவளியும் போல ஆக்கிச் சிதைத்துவிடாமல், அளவாகவும்செம்மையுடனும்வெளியிடுங்கள். உணர்ச்சியினை அளவுக்குமீறி மிகைப்படுத்தி, இரைச்சலும் கூச்சலும் போட்டுப் பேசி, சுவைத்திறன் இல்லாத தரையாளர்களைக் களிப்பூட்ட முயலாதீர்கள். மிகைப்படுத்தி நடிப்பவர்களின் உரையாடலைக் கேட்பது, என் உள்ளத்தைப் பெரிதும் துளைத்து வருத்துகின்றது. அளவுக்கு மீறி நடிப்பவனைச் சவுக்கினால் அடித்து ஒறுத்தலை நான் விரும்புகின்றேன். அத்தகையவன் செயல், ஏரோதையே விஞ்சும் ஏரோது போல இருக்கின்றது. மிகை நடிப்பை விலக்கி விடுமாறு உங்களை யான் பெரிதும் மன்றாடி வேண்டுகின்றேன்.

மிகை நடிப்பை விலக்குவதற்காக, நீங்கள் மிகுந்த கோழை போலவும் ஆகிவிடாதீர்கள். உங்கள் அறிவில் திறனையே ஆசானாகக் கொண்டு, வேடங்களுக்கு ஏற்றபடி இனிதாக நடியுங்கள். சொல்லுக்குச் செயலும், செயலுக்குச் சொல்லும் ஒத்திருக்கு

---

(2) " All the world's a stage,
And all the men and women merely players;
They have their exits and their entrances;
And one man in his time plays many parts,
His acts being seven ages."

—William Shakespeare, *As You Like it*.

மாறு பார்த்துக்கொள்ளுங்கள். இயற்கையினை உள்ளது உள்ள படியே விளக்கிக்காட்டுவதுதான் நடிப்பின் குறிக்கோள். அளவிற்கு மிகவோ குறையவோ நடித்தால், ஒருவேளை அறிவில் லாதவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரலாம்; ஆனால் அறிவுடையவர் களுக்கு அது மிக்க வருத்தத்தையே விளைவிக்கும். மனித இயல்பைப் "போலச் செய்து" காட்டமாட்டாமல், காண் போர்க்கு அருவருப்பை உண்டாக்கி விடுபவர்களை மனிதர்கள் என்றே நான் மதிக்கமாட்டேன்.... நகைச்சுவை நடிகர்கள், தங்களுக்கென்று எழுதப்பெற்ற வசனத்தை மட்டுமே பேசுக. அவர்கள் தம்மனம் போனபடி எதனையும் உளராமல் இருப்பது இன்றியமையாதது........."

**குறிப்புக்களின் சிறப்பு :**

"அமலாதித்தன்" (Hamlet) என்னும் நாடகத்தின்கண் வருகின்ற, சிறந்த இந்தக் குறிப்புக்களின் வாயிலாக, ஒரு நடிகர் என்ற நிலையில் செகப்பிரியர் எத்தகைய அனுபவமும் உணர்வும் வாய்ந்து விளங்கியிருந்தார் என்பதனை, நாம்ஓரளவு உணர்ந்து கொள்ளப் பெறுகின்றோம். இவற்றால் அவர்தம் அரிய சிறந்த இயல்புகள், நாம் நுண்ணிதின் எண்ணியுணரும்படி நமக்கு இனிது புலனாகின்றன. இங்ஙனமே, நமது தமிழ்நாட்டுச் சைவ சித்தாந்த சந்தானசாரியர்களுள் ஒருவராகிய அருள்நந்தி சிவத்தின் அருளுள்ளம், அவர்தம் நூலின் ஓரிடத்தில் மிகத்தெளிவாக நமக்குப் புலனாகும்படி, சிறப்புற விளங்கித் திகழ்கிறது. அது பற்றி இங்கு ஒருசிறிது காண்போம்.

**அருள்நந்திசிவம் :**

தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகத் தொன்றுதொட்டுத் தோன்றி வந்துள்ள சான்றோர்கள் பலராவர். அவர்களுள் அருள்நந்தி சிவாசாரியார் என்பவர் ஒருவர். நம்மிற் பெரும் பாலோர், தொல்காப்பியர் திருவள்ளுவர் இளங்கோவடிகள் நக்கீரர் கம்பர் போன்ற சான்றோர்கள் சிலரை மட்டுமே, பொதுவாக அறிவர். அருள்நந்தி சிவம்போன்ற சான்றோர்கள் பலரைத் தமிழ்மக்கள் பெரும்பாலோர் அறிந்துகொள்ளவில்லை. திருநீறு அணியும் சைவர்களில் ஒருசிலருக்கு மட்டுமே அருள் நந்திசிவம் உரியவரல்லர். தமிழ்மக்கள் அனைவருக்குமே சிறப்பாக உரிய தொல்காப்பியர் திருவள்ளுவர் போன்ற சான்றோர் களில், அருணந்திசிவம் ஒருவராவர் எனத் துணிந்து கூறலாம்.

இலக்கணத்திற்குத் தொல்காப்பியரும், நீதிநூலுக்குத் திருவள்ளுவரும், நெஞ்சையள்ளும் செஞ்சொற் காப்பியத்திற்கு இளங்கோவடிகளும், கவிதைச் சுவைக்குக் கம்பரும், தமிழக வரலாற்றுக்குச் சேக்கிழாரும், பக்தி இயக்கத்திற்கு ஆழ்வார்களும் நாயன்மார்களும், யோக ஞான அனுபவங்களுக்குத் திருமூலரும் போல, நமது தமிழ்நாட்டின் தத்துவ ஞானத்திற்குத் தலைசிறந்த பெருஞ் சான்றோர்களாக மதித்துப் போற்றத்தக்கவர்களுள், ஆசிரியர் அருணந்திசிவம் மிக்க பெரும் சிறப்புடையவர் ஆவர். உலகப் பெரும் தத்துவஞானச் சான்றோர்களின் குழுவில், ஒருபெரும் சிறப்புறுப்பினராக ஒருங்கு வைத்துப் போற்றி வணங்கத்தக்கவர் அருள்நந்திசிவம் எனலாம்.

(தொடரும்)

---

**கடிதம் :**

V, N. Arumugam, B. com., F, C. A.

Fyeser & Rose
12, Melean St, Madras 1.

163-H: Rayapettah High Rd.
Madras 4.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் "ஞானசம்பந்தம்" 32ஆவது ஆண்டுத் தொடக்க இதழுக்கு வழங்கியருளிய ஆசிச் செய்தியைக் கண்ணுறும் பேறு கிடைத்தது. ஆசிச் செய்தியில் 32 தருமங்கள் குறிப்பிட்டிருப்பதால் 32 தருமங்கள் யாவை என்பதையும் இவ்விதழில் விளக்கியிருப்பதையும் கண்ணுற்றேன்.

தமிழக ஆளுநர் மேதகு. கே. கே. ஷா அவர்களின் தொடக்கப் பேருரை நன்றாக அமைந்துள்ளது. குறிப்பாக திருக்கோயிலின் நோக்கம். "மனம் கங்கையாக வேண்டும்" என்ற பத்திகள் அடியேனை மிகவும் ஈர்த்தன.

"நேரு சொன்ன நீதிமொழிகளும்" "குந்தியின் அறவுரையும் சிந்தித்து உணரவேண்டியவை,

ஆக "ஞானசம்பந்தம்" உயிர்க்குத் துணைபுரிவதாகவே அமைந்துள்ளது.

செந்தில் ஆண்டவன் அடிமை,
V. N. ஆறுமுகம்.

# " கொழிதமிழ்க் கூடலில் » » கொன்றை வேணியான் "

## வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 32. இதழ் 1. பக்கம் 39 இன் தொடர்ச்சி )

## 57. வலைவீசின படலம்

மின்னலைத் திரித்தாற் போன்ற சடையாளன் இடைக்காடன் பின் சென்று மீண்டு பிணக்குத் தீர்த்த விளையாடல் கண்டோம். இதுபோது அவன் முந்நீரில் வலை வீசி உமையவளை மணங் கொண்ட விந்தை காண்போம்.

அந்தமில்லழகன் உலகமீன்ற கன்னியாம் கயற்கண் கொடிக்கு வேதங்களின் மறைபொருளைத் தனியிடத்திருந்து உபதேசிக்கும் போதில் என்ன காரணத்தாலோ உமை சிறிது அச்சமும் கவலையும் கொண்டவளாகக் கருத்தின்றிக் கேட்டாள். அஃதறிந்த ஈசன் 'பெண்ணே பொருளில் ஆசைவையாது அன்புகாட்டாத பெண்கள்போல் நீயும் பராமுகமாகி இப்பொழுது என்னை அவமதித்தாய்; ஆதலால் விரதமும் அறனுமில்லாது மீன்பிடித்துண்ணும் வலைஞர் குடியில் சென்று பிறப்பாய் என்று ஆணையிடவும், உமை நடுங்கி ' ஐயனே உம்மைப் பிரிந்து நான் தனித்து வாழ்வது எங்கனம் ' என்று பணிந்து கேட்டாள். இறைவனும் மனமிரங்கி 'வாங்குநீர்க் கானல் வாழ்க்கை வலைஞர் கோன் மகளாய் நீ வைகி வளரும் நாள் யாம் போந்து உன்னை மணப்போம் கவலற்க ' – என்று திருவாய்மலர்ந்தார்.

உமை சாபம் பெற்றமை கேட்டு வந்த ஐங்கரனும் அறுமுகனும் இதனாலன்றோ விபரீதங்கள் நேர்ந்தன என்று கூறி வேதப் பனுவல்களை விநாயகனும்; சிவஞானபோத நூலை வேலவனும் எடுத்துக் கடலிடை வீசியெறிந்தனர். முக்கண்ணன் மிகுந்த கோபமுற்று திருநந்திதேவரைப் பார்த்து 'சமயமறியாமல் இவர்களை ஏன் உள்ளே விடுத்தாய் என்று வினவி - இக்குற்றத்திற்காக நீ கடலிடை சுறுவாக உழலக்கடவாய் – என்று சாபமிட்டார். விநாயகருக்குச் சாபமிட்டால் அது தன்னையே வந்து சாரும் என்பது தெரிந்தவராய் முருகனை வணிகக்குலத்தில்

ஊமைப்பிள்ளையாக அவதரிக்கச் சாபமிட்டார். நாயகன் ஏவலாலே நாயகி வலைஞர் மகளாய்ப் பிறந்தாள்; நந்திப்புத்தேள் அடுசுருவாகிக் கடலிடை உழன்ருர் - இவைகளை இன்னும் விரித்துச் சொல்வோம்.

## எழில்நிறை பரதவரின் பாக்கம் :-

பாண்டிய நாட்டுக் கீழைக் கடற்கரையில் தாழை சூழ்ந்த தண்துறைப் பாக்கமொன்றுளது. முடங்கு முள்ளிலையால் மூடப்பட்ட தாழம்பூக்கள், காற்றுவீசும்போது அசைவது கேடயத்திற்குள் மெய்யை மறைத்து வாளெடுத்துப் போருக்கு வரும் வீரர்போல இருந்தது. ஊனுணக்கும் ஓசை, பறவைவிரட்டும் ஒளி, மீன் வாங்குவோர் இரைச்சல், வலைவீசுவோர் அரவம் எல்லாம்' அலையொலியை அடக்கின. கடலாடிச் செல்லும் மக்களுக்கு அறம் தெரிந்தனபோல் தாழை, பொதிந்தசோறவிழ்த்துக் கொடுக்கும். புன்னைகள் முத்துக்களைக் கொடுக்கும். திரையிலாடும் பவளக்கொடி பரதவர் குடிசையின் மேற்படரும். அலைகள் மீனுணக்கும் முன்றிலில் முத்துக்களைக் கொழித்துத் தள்ளும். நுளைச்சியர் விற்கும் மீனின் நாற்றத்தை அவர் குழலிலுள்ள தாழை போக்கும். குமுதமலரில் மொய்க்கும் வண்டு, நுளைச்சியரின் பனங்கள்குடித்த வாயிலும் மொய்க்கும்.

அப்படிப்பட்ட பரதவர் குடியில் தேவரினும் தூயனுகிய ஒருவன் தான்செய்த சிறிய தீவினையால் பரதவர் தலைவனுய் விளங்குகின்ருன். செம்படவர்கள் தாங்கள் பிடித்த மீன்களைத் திறையாக இவன் இல்லத்தில் நிறைப்பார்கள். இறைவனது திருவடி பதித்த நெஞ்சுடைய இவனுக்கு மக்கட் பேறில்லாதது பெருங்குறையே. ஒருநாள் தன்னினத்தவர்களோடும் நெடிய வலைகளோடும் மீன்பிடிக்கக் கிளம்பினன். இமவான் செய்த தவத்தினல் மேருமலையின் ஓடையிலும், மீனவன் செய்த தவத்தால் வேள்வியிலும் வந்துதித்த பெருமாட்டி, இவ்வலைஞன் செய் தவத்தால், ஆங்கோர் குழவியாய்க் கிடந்தாள். குழந்தையைக் கண்ட தலைவன் உவகைமீதூர பூவில்வாழ் திருமகளோ - நீரிலுறையும் தெய்வமோ – கண்களிமைப்ப இங்கொருகுழவியாய்க் கிடந்தது எது என்று வாய்விட்டுக் கூறித் தழுவியெடுத்துத் தன் கற்பிற்சிறந்த மனையாட்டி கைக்கொடுத்தான்.

பிறவிக் குருடன் கண்பெற்றதுபோல், வறியவன் நிதி பெற்றதுபோல் மகிழ்ந்தாள் அம்மாது. தன்குடி வாழ்விக்க வந்த மணிவிளக்கு இது என்று கொண்டாடி தம்மினத்திற்கேற்ப ஒப்பனைசெய்து பேணிவளர்க்கத் தொடங்கினுள் அவள். பெரு

மாட்டியும் பைய வளர்ந்து கடலாடியும் – கருவாடு காத்தும், புன்னைச் சோலையில் பொழுது போக்கியும் மங்கைப் பருவமடைந்தாள்.

ஆலவாய் நாயகன் ஏவலால் சுருவாக வந்த நந்தி தேவன், கடலில் செய்யும் தொல்லைகளை வலைஞர்கள்கூற தலைவன் கேட்டறிந்தான். விநாயகரும் வேலவரும் கடலுள் விசியெறிந்த நூல்களைத் தலைமிசைத் தாங்கி மந்தரமலைபோல் கடலைக் கலக்கியது சுரு. அதனைப் பிடிக்கப் பலரும் பலவாறு முயன்றனர். வலைஞர் தலைவன் பல படகுகளைத் துணையாகக்கொண்டு நெடிய வலைகளை விசிப் பிடிக்க முயன்றான். சுருவும் ஒவ்வொரு படகாகக் கவிழ்த்து கைப்படாமல் ஓடியது. மாறிமாறி பல படகுகளில் ஏறி அத் தலைவன் முயன்றபோது வெவ்வேறு உடல்களில் புகுந்துழலும் உயிர்போல இருந்தது.

கடைசியாக எவனொருவன் இச்சுருவைப் பிடிக்கிறானோ அவனே என் மகளை மணப்பதற்குத் தகுதியுடையவனாவான் என்றறிவித்தான் தலைவன். மற்றவர்கள் முயல்வதற்கு முன் வேதங்களுக்கெட்டாத விமலன் தானே வலைதாங்கி வலைஞனாய் வந்தான். கண்டற்காட்டையும் கைதைக் கானலையும் தாண்டி வந்து தலைவனைக் கண்டான். அவனும் அன்புடன் நீர்யாரென்று கேட்டான். அதற்கு வந்தவன் மதுரையில் வலைஞர்களின் தலைவனொருவனுண்டு, அவன் மகன் நான். படைத்துக்காத்து அழிக்கும் ஆற்றல் எனக்குண்டு. அதுவுமன்றி என் வலைவீச்சில் அகப்படாத மீனே கிடையாது. என் ஆற்றல் இதுவாகுமென்றனன்.

உடனே வலைஞர் தலைவன் தன் துன்பத்தை எடுத்துக்கூறி சுருவைப் பிடிக்கவும் தன்மகள் கைப்பிடிக்கவும் வந்தவனை இசைவித்தான். இளைஞனும் அதனை ஏற்று, தோளில் வலை கொண்டு படகேறி உடல்வளைத்து வலைவிசி முயன்றான். மாசற்ற அன்புவலையில் அகப்படும் இறைவனிட்ட வலையில் ஆணவச் சுருவும் அகப்பட்டது. செம்படவர் சேரியே இதைக்கண்டு வியந்து நின்றது. தலைவன் தான் சொன்னபடியே தன்மகளைக் கிளைஞர் ஆர்ப்பரிக்க இளையவனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான்.

வலைஞர்கள் அனைவரும் காண பெருமான் உமையோடும் சுருவடிவம் மாறிய விடையோடும் காட்சிதந்தான். பரதவர் தலைவன் தன் பண்டைப் பிறப்புணர்ந்து பலவாறு துதித்து வணங்கினன். உமை தன் மகளான மாண்பையும் பெருமான்

மருமகனுன மேன்மையையுங் கண்குளிரக் கண்டு அகமகிழ்ந் தான்.

இரக்கமில் இழிந்த யாக்கை யெடுத்துழ லேழை யேனைப்
புரக்கவின் றென்போல் வந்த புண்ணிய வடிவம் போற்றி
அரக்கெறி பவளச் செவ்வா யணங்கினை மணந்தென் பாசங்
கரக்கவெள் விடைமே னின்ற கருணையே போற்றியென்ருன்.

வலைஞனுக்கு அருள்செய்த பிறகு ஆலவாயண்ணல் உமாதேவியோடு உத்தரகோசமங்கை சென்று வேத ரகசியங்களை உபதேசித்தான். மீனவர்கோன் மகளான மலைமகளும் கருத்தூன்றிக் கேட்டு உளங்கொண்டாள். அப்போது அங்கு அன்புடன் கேட்ட அறுபதினுயிரம் பக்தர்களுக்கும் உபதேசித்து மீனவரோடு மதுரை மீண்டான் இறைவன்.

(வளரும்)

## கற்குடியில் அற்புதம்!

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 2 கல் தொலைவில் உள்ளது உய்யக்கொண்டான் என்னும் தலம். இது திருக்கற்குடி எனத் திருமுறைகளில் வழங்கப்படும். ஞான சம்பந்தர் அப்பர் சுந்தரர் ஆகிய மூவர் தேவாரத் திருப்பதிகங்களையும் பெற்றது. திருக்கோயில் இவ்வூரின் மலையுச்சியில் விளங்குகிறது. இது தருமையாதீனத்துக்குச் சொந்தமானது.

இத்தலத் திருக்கோயிலின் உட்பிராகாரக் கருங்கற் சுவரில் மாதந்தோறும் பௌர்ணமி நாளில் உப்புநீர் ஊறி வருகின்றது. அந்நாளில் இரவு 6 மணிமுதல் 9 மணிவரை இறைவனை வழிபட்டு வந்தால் நரம்புகள் வளர்ச்சியடைந்து உரம் பெறுகின்றன. நினைவாற்றல் பெருகுகின்றது. நூற்றுக்கணக்கான அன்பர்கள் இந்நாளில் இரவு வழிபாடுசெய்து நலமடைந்து வருகின்றனர். திருச்சிராப்பள்ளியிலிருந்து டவுன்பஸ் வசதி உண்டு.

# திருமந்திரம் - மூலமும் உரையும்

திருக்குறள்வேள்

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

( மலர் 32. இதழ் 1. பக்கம் 24 இன் தொடர்ச்சி)

## 19, அன்பு செய்வாரை அறிவன் சிவன்

280. இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே.

இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும் - துன்பம் கண்டு வெறுத்ததும் அன்புகொண்டு விருப்புற்றதும் உள்ளத்தில் உள்ள இறைவன் நன்ருக அறிவான். உகந்து அருள்செய் திடும் உத்தமநாதன் - அவரவர் விரும்புவதற்கேற்ப அருள் செய்வான் மேலோனுகிய தலைவன். கொழுந்தன்பு செய்து அருள் கூரவல்லார்க்கு - தளிர்த்து வரும் அன்பினைப் பற்றி அருளின் பெருமையை அறிந்து அவனுடன் பொருந்தியிருப்பார்க்கு. மகிழ்ந்து அன்புசெயும் அருளதுவாமே - அவன் மகிழ்ச்சியுடன் அவனது சத்தியை அளிப்பான்.

இகழ்தல் - பொன்னும் மெய்ப்பொருளும் நாடிப் பெருத போது இகழ்தல். பெறுதல் - அன்பு ஒன்றே கொண்டு விரும்பு தல். உகந்தருள் செய்தலாவது, இறைவன் வேண்டுவார்க்கு வேண்டியவற்றை ஈதல்.

உத்தமநாதனுகிய சிவன் அன்பு செய்வார்க்கு அருள் புரி வான்.

281. இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல என்னினும்
அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த
முன்பப் பிறவி முடிவது தானே.

இன்பப் பிறவிக்கு இயல்வது செய்தவன் - இன்பத்துக்குக் காரணமான பிறவியைப் போதிய சாதனங்களோடு அமைத்துக் கொடுத்த இறைவன். துன்பப் பிறவி தொழில் பல என்னினும்- பிறவியைத் துன்பமாக்கிக் கொள்ளும் பல தீமையான செயல்களைச் செய்யினும். அன்பில் கலவிசெய்த ஆதிப்பிரான் - அன்பினில் இணைந்திருந்த ஆதிப்பிரானாகிய சிவன். முன்புவைத்த அப்பிறவி முடிவதுதானே - முன்னே அமைத்துத்தந்த பிறவியானது நீங்கும்படி செய்வான்.

பிறவித்தொழிலாவது, பிறப்பதற்கே காரணமான செயல். அன்பில் கலவி செய்தலாவது, இடைவிடாது அன்பு பூண்டிருப்பார் மனத்தில் கலந்திருத்தல். பிறவி முடிவாவது, பிறவாநெறி பெறுதல்.

ஆதிப்பிரானோடு பொருந்தியிருந்தால் பிறவி நீங்கும்.

282. அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி
இன்புறு கண்ணியொ டேற்க இசைந்தன
துன்புறு கண்ணியைந் தாடுந் துடக்கற்று
நண்புறு சிந்தையை நாடுமின் நீரே.

அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி - அன்பு நிறைந்த சிந்தையில் மேலெழுந்து தோன்றும் ஒளிப் பிழம்பாகிய பெருமான். இன்புறு கண்ணியொடு ஏற்க இசைந்தன - சிற்சத்தியோடு ஏற்றுக்கொள்ள ஒருப்பட்டான். துன்புறு கண்ணி ஐந்து ஆடும் தொடக்கற்று - அப்போது துன்பத்தைத் தரும் வலைபோன்ற ஐம்புலன்களின் தொடர்பு அற்றுக்கெடும். நண்புறு சிந்தையை நாடுமின் நீரே - ஆதலால் நீங்கள் இறைவனிடத்தில் அன்புகொள்ளும் உள்ளத்தை வேண்டிப் பெறுங்கள்.

கண்ணி - கண்ணையுடையவள்; சத்தி. துன்புறு கண்ணி - துன்பத்தைத் தரும் ஐம்புல ஆசையாகிய வலை. ஆசையுள் பட்டார் வெளிப்பட முடியாமையின் வலையாயிற்று.

அன்போடு சோதியைச் சிந்தையில் நாடினால் ஐம்புல ஆசை நீங்கும். 3

283. புணர்ச்சியுள் ஆயிழை மேல்அன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லாருக்
குணர்ச்சியில் லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அதுவிது வாமே.

புணர்ச்சியுள் ஆயிழைமேல் அன்புபோல - சிற்றின்பத்தில் பெண்ணின்மேல் வைத்த அன்புபோல. உணர்ச்சியுள் ஆங்கே

ஓடுங்கவல்லார்க்கு - சிரசில் ஆகாயக்கூறில் உண்டாகும் பரிச உணர்வில் ஒடுங்கியிருக்கும் திறமை பெற்றவருக்கு. உணர்ச்சி இல்லாது குலாவி உலாவி அணைத்தலும் - உடல் உணர்வும் கெட்டு நாதத்தோடு பொருந்தி துவாதசாந்தம் சென்று மனத்தைப் பொருந்தலும். இன்பம் அது இதுவாமே - அவ்வின்பம் சிற்றின்பம் போல அமைவதாகும்.

உணர்ச்சி - இறைவனை இடைவிடாது சிந்திப்பதால் சிரசின் மேல் உண்டாகும் உணர்வு. குலாவுதல் - திளைத்தல். இங்கு நாதத்தில் திளைத்தலைக் குறித்தது. உலாவுதல் – சிரசின்மேல் துவாதசாந்தப் பெருவெளிக்குச் செல்லல், அது பேரின்பம். இது, சிற்றின்பம்.

"பெற்றசிற் றின்பமே பேரின்ப மாயங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென் றுந்தீபற"

பாடல் – 33.

என்ற ஞான சாத்திரத்தில் ஒன்றாகிய திருவுந்தியார் பாடலை ஒப்பிட்டுக் காண்க.

உணர்வு கெட்டு அனுபவிக்கும் இன்பம் போன்றது இறைவனது இன்பம். 4

284. உற்றுநின் றாரொடு மத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றுந் தெரிந்தறி வார்இல்லை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே.

உற்று நின்றாரொடும் அத்தகு சோதியை – அன்போடு பொருந்தித் தியானிப்பாரோடு விளங்கும் சோதியை. சித்தர்கள் என்றும் தெரிந்து அறிவார் இல்லை – சித்துக்களைச் செய்யும் சித்தர்கள் அறிவினால் தெரிந்துகொள்ள முடியவில்லை. பத்திமையாலே பணிந்து அடியார் தொழ – ஆனால், பத்திசெய்து வணங்கும் அடியார் வேண்ட. முத்திகொடுத்து அவர் முன்பு நின்றானே – அவர்களுக்கு முன்னின்று முத்தியைக் கொடுத்தருளுவான்.

சித்தர் – சித்துக்களைச் செய்பவர். சிவயோகிகள் அட்டாங்க யோகப் பேறாகிய சித்திகளை விரும்பார் என்றறிக.

அன்போடு பணிவார்க்கு விளங்கித் தோன்றி முத்தி கொடுத்தருளுவான். 5

(தொடரும்)

சிறுகதை

# மன மாற்றம்

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.,

ஆசிரியர் அமுதலிங்கத்திற்கு அளவுகடந்த மகிழ்ச்சி. அன்று காலை அவர்க்கு வந்த அந்தச்செய்திதான் அவரை அவ்வாறு மகிழ்ச்சிக்கடலில் திளைக்கச் செய்துவிட்டது.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"

என்ற தமிழ்நாட்டு மூதுரை பொய்த்துவிடவில்லை, பூங்கொடி! இந்த ஊர்க்கு நாம் வந்து முழுதாக மூன்று வருடங்கள் கூட ஆகவில்லை. நம் தரமறிந்து, ஆசிரியர் தொழிலின் திறமறிந்து, எப்படிப் பாராட்டுகிறார் பார்த்தாயா பரந்தாமனார்! இது இந்தத் தொழிலுக்கே உரிய கௌரவம், பூங்கொடி!"

என்று மனைவியிடம் கூறி மகிழ்ந்தார். எப்போதும்போலப் புன்முறுவல் ஒன்றால் தம் மகிழ்ச்சியை அடக்கமாக வெளிப்படுத்திக் கணவர்க்கு, உணவு தயாரிக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் மனைவியார்.

அன்று காலை பரந்தாமனார் தம்முடைய எழுத்தர் வழியாக அனுப்பிய கடிதக் குறிப்புத்தான் அமுதலிங்கத்தின் அளவற்ற மகிழ்ச்சிக்குக் காரணம்; அப்படி என்னதான் எழுதியிருந்தார், இலட்சக் கணக்கான செல்வத்திற்கு உரிமையுள்ள செல்வர் பரந்தாமனார்?

" உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. அமுதலிங்கம் பி. எஸ்சி., பி. டி. அவர்களுக்கு, பரந்தாமன் பணிவுடன் எழுதிக் கொண்டது.

உயர்நிலைப்பள்ளிக் கல்விப் பிரச்னை ஒன்று பற்றிக் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது; இதில் தங்கள் துணை பெரிதும் இன்றியமையாததாக உள்ளது. இன்று மாலை ஐந்து மணிக்குத் தாங்கள் என்னைச் சந்திக்க முடியுமானால் பெரிதும் மகிழ்வேன்; கார் அனுப்புவேன்;

தங்கள் அன்புள்ள
பரந்தாமன்.

– என்பதுதான் அமுதலிங்கம் பெற்ற கடிதம். அவ்வூர் உயர் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக மூன்றாண்டுகட்கு முன்னர் வந்த அமுதலிங்கம் ஒரு கணக்குப் பட்டதாரி; பரந்தாமனார் அவ்வூரில் பெரிய புள்ளிகளில் ஒருவர்; பள்ளியின் ஆலோசனைக் குழுவின் தலைவர். பொறுப்பேற்றது முதல் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு அமுதலிங்கத்திற்குக் கிடைக்கவில்லை. கிடைத்தபோதும் கலந்துரையாட முடியவில்லை அவரால். பரந்தாமனாரது புன்முறுவல் ஒன்றுதான் இதுவரை அவர் பெற்றது. இப்போது உயர்பள்ளிக் கல்விப் பிரச்னை ஒன்று பற்றி ஆலோசிக்க அவர் எண்ணுகிறார்: அதற்கும் ஆசிரிய நிலையில் உள்ள தம்மை அழைக்கிறார் என்றால் அது மிகவும் அரிய ஒரு வாய்ப்பாகவே அமுதலிங்கத்திற்குப்பட்டது. கல்விக்குச் சிறிதும் தொடர்பு இல்லாதவர்கள், பார்க்கப்போனால் கல்வி நிலையங்களில் மழைக்குக் கூட ஒதுங்கி அறியாதவர்கள், உயர் கல்விப் பிரச்னைகள் பற்றி விவாதம் செய்து முடிவெடுக்கும் உலக நிலையில், இதனை அவர் இவ்வாறு கருதியது பொருத்தமானதுதான்.

பல விழாக்களில் - உள்ளூர்த் திருக்கோயில் உற்சவங்களில், விரதநாட்களில், பரந்தாமனாரை அவர் சந்தித்ததுண்டு. அவருடைய நண்பர் சிலர் பரந்தாமனார் சிறந்த சிவபக்தர் என்றும், பன்னிரு திருமுறைகளில் ஆழ்ந்த ஈடுபாடுடையவர் என்றும், ஏழைமாணவர் பலர்க்கு உதவிசெய்து வருபவர் என்றும் கூறி வந்தமையால் பரந்தாமனாரிடத்து அவரையறியாமல் ஒரு மதிப்பும் மரியாதையும் உண்டாகியிருந்தன. ஆகவேதான் அவருடைய அழைப்பை மகிழ்ந்து ஏற்றுக் கொண்டார். புனிதமான ஆசிரியப் பொறுப்புடன் பணியாற்றிவரும் அவர் இலட்சியக் கோட்பாடுகளில் அழுந்திய பற்றுவைத்து வாழ்ந்துவருபவர்; ஆதலால், அதற்கு இடையூறு வராமல் தம் பணியைத் தொடர்ந்து செய்துவரும் பண்புடையவர்; எங்காவது இடையூறு வருமானால், ஒதுங்கிக் கொண்டுவிடும் தன்னடக்கம் அவர் தனிச்சிறப்பு.

[2]

பரந்தாமனாரது அழகிய காரில் ஏறிச் சென்று இறங்கிய போது, நுழைவாயிலிலேயே நின்று வரவேற்று, அவரை அழைத்துக்கொண்டு சென்றார் பரந்தாமனார். அவருடைய நெடிய உருவமும், அதற்கேற்ப நடந்த பெருமித நடையும் பண்டைக்கால அரசர்களையே அமுதலிங்கத்திற்கு நினைவூட்டின.

வரவேற்பு அறை, முதலிய பல அறைகளைக் கடந்து அழைத்துச் சென்றார் பரந்தாமனார். மிக நெருக்கமானவர்களுக்குத் தரக்கூடிய மரியாதையாக ஏற்றுத்தொடர்ந்தார் அவர்.

ஓர் அழகிய அறையில் சென்று தாம் அமர்ந்துகொண்டு, ஆசிரியரையும் அமரவைத்தார் பரந்தாமனார். "இப்போது நான் தங்களை வரவழைத்தது நம்மூர்ப் பள்ளிக்கல்விப் பிரச்சினை ஒன்று கலந்துபேச என்பதை நீங்கள் அறிவீர்கள்" என்றார் புன்முறுவலுடன். "ஆமாம்; தங்கள் கடிதக் குறிப்பைப் பெற்றேன்" என்றார் ஆசிரியர். "நம்மூர்ப்பள்ளியில் பதினோராம் வகுப்பு — பள்ளியிறுதி வகுப்பில் பயிலும் மதிவாணன்" என்று பரந்தாமனார் தொடங்கியபோதே "ஆம்! மூன்றாண்டுகளாக அந்த வகுப்பை முற்றுகையிட்டிருக்கும் மாணவன்" என்று குறுக்கிட்டார் ஆசிரியர். பரந்தாமனார் முகம் மாறியது; அவனை இந்த ஆண்டு எப்படியாவது வெற்றி அடையச் செய்ய வேண்டுவது தங்கள் பொறுப்பு. உங்களுக்குக் கணக்குத் தாள்கள் வருவதாக அறிந்தேன். மற்றப் பாடங்களை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று மேலும் ஏதேதோ பேசிக்கொண்டே போனார் பரந்தாமனார்; அமுதலிங்கனார் கண்களுக்கு முன்னால் உலகமே சுழல்வது போன்றிருந்தது; தம்முடைய கற்பனை உலகம் சரிந்து தம்மீது இடிச் சிரிப்புச் சிரித்தபடி விழுவது போன்றிருந்தது. "இதற்காகத்தான், கல்வி சம்பந்தமான இதனைச் சிந்திப்பதற்குத்தான் தங்களை வரவழைத்தேன். தங்கள் துணை நிச்சயம் வேண்டும். கைம்மாறாகக் கணிசமான தொகையொன்றை இன்றிரவு அனுப்புவேன்" என்று கூறிமுடித்த பரந்தாமனார், இருளடைந்துபோன அமுதலிங்கத்தின் முகத்தைக் கவனிக்காமலே எழுந்து கை குவித்தார். "தாங்கள் சிறிதும் யோசிக்கக் கூடாது; மதிவாணன் என் நெருங்கிய நண்பர் நீலமேகத்தின் மகன்; அவருடைய செல்வாக்குத் தங்களுக்கே தெரிந்திருக்கும்" என்றார் தொடர்ந்து,

"ஐயா! தாங்கள் கூறுவதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாமைக்கு வருந்துகின்றேன். கல்விச்சாலை என்பது ஒரு கோயில் போன்றது; அங்குப் பயிலும் மாணாக்கர்கள் அறிவுத் தெய்வத்தை வழிபடும் ஆசிரியர்களுக்கு அடங்கிப் புனிதக் கல்விச் செல்வத்தைப்பெற்றுச் சிறக்க வேண்டியவர்கள். அவர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், கல்வி கற்பிப்பதிலும் அவர்களுடைய தேர்வு முறைகளை நடத்துவதிலும் ஆசிரியர்களுக்கு ஒரு விதி — மரபு — நெறி உண்டு. அது கல்வித்துறை அதிகாரிகள் வகுக்கும் புறநெறிக்கு மாறுபட்ட அகநெறி; அறநெறி. விடைத்தாள்களில் உள்ள மதிப்பெண்களை மாற்றுவது தங்களைப் போன்றவர்களுக்கு

விளையாட்டாகத் தோன்றலாம் ; ஆனால் அறிவுத் தாயின் அரும்புதல்வர்களுடைய தலையெழுத்துக்களாகவே அவற்றைப் பாவித்துக் கவனமும் விழிப்பும் தோன்ற மதிப்பெண்கள் அமைப்பதே ஓர் இலட்சிய ஆசிரியரின் நோக்கங்களாக இருக்கும். மதிவாணன் தங்கள் நெருங்கிய நண்பர் நீலமேகத்தின் மகனாக இருக்கலாம். அதற்காக ஓர் இலட்சிய மரபையே அவமதிப்பது என்பது கல்விக்கும் நல்லதன்று ; நாட்டிற்கும் நல்லதன்று ; பண்பாடு நிரம்பிய தங்களுக்கும், என்னைப் போன்ற எளிய ஆசிரியனுக்கும் அழகன்று ; என்னைத் தாங்கள் அழைத்துப் பேசியமைக்கு என் பாராட்டுக்கள் ; என்னுடைய வார்த்தைகள் இப்போது தங்களுக்குக் கசப்பாகத் தோன்றலாம் ; பின்னால் சிந்தித்தால்தான் தாங்கள் கூறும் முறையிலுள்ள அபாயத்தைத் தாங்கள் உணர்வீர்கள். என்னை மன்னித்து விடுங்கள்."

என்றார் அமுதலிங்கம், உணர்ச்சி மேலீட்டில் அவரது குரல் கரகரத்திருந்தது, கண்களின் இமையோரத்தில் பளிச்சிட்ட ஈரம் தெரிந்தது.

எப்படித் தடுமாறிக் கீழே விழாமல் நுழைவாயிலுக்கு வந்தார் என்பது அமுதலிங்கத்திற்குத் தெரியவில்லை.

காரின் கதவைத் திறந்துவிட்ட எழுத்தரிடம் கை சாடையாக மறுத்துவிட்டுப் படிகளில் இறங்கித் தம்முடைய வீட்டை நோக்கி, சாலையில் நடந்தே செல்லலானார்.

[3]

சோர்வுடன் நடந்துவந்த தலைமையாசிரியர் மிதியடிகளைக் கழற்றிவிட்டுத் தம் அறைக்கு வந்து நாற்காலியில் அமர்ந்தார்; பெருமூச்சு விட்டார்.

திருமணப் பருவத்தில் நிற்கும் அவர் பெண் பூங்குழலி அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு அவரது ஆழ்ந்த சிந்தனையைக் கலைக்க விரும்பாமல் உள்ளே சென்றாள். 'விவேகானந்தர்' படம் அவருடைய கண்களிற் பட்டது. சிரிப்பதா அழுவதா என்று தெரியாமல் தவித்தது மனம்; அநீதியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள அவர் கருதினார். பரந்தாமனாருடைய புறக்கோலத்திற்கு அப்பால், அழுகலெடுத்த அவர் அடிமனம் தெளிவாகத் தெரிந்தது அமுதலிங்கத்தின் உள்நோக்கிற்கு.

புறப்படுமுன் படித்துவிட்டு, மேசை மீது விரித்து வைத்திருந்த அடங்கன் முறையில், எப்போதோ அவரால் கோடிடப்பட்ட தேவார வரிகள் அவர் கண்களிற் படுகின்றன.

"உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறிதி என்று
வெள்கினேன்; வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட்டேனே"

வேகமாகத் தம்முடைய பெயர் அச்சிடப்பெற்ற தாளை எடுத்துச் சிலவரிகளை எழுதினார் அந்த இலட்சிய வீரர்; ஆம்; தம்மைத் தம்முடைய பணியிலிருந்து விடுவித்துக்கொள்ளும் 'ராஜிநாமா'க் கடிதம் அது.

வெளியில் கேட்ட கார் அரவம் அமுதலிங்கத்தை நிமிரச் செய்தது. அவரது கண்கள் வியப்பால் விரிந்தன. ஆம்; பரந்தாமனார் வேகமாக வந்து கொண்டிருந்தார். அவருடைய நடையின் வேகமும், முகத்தில் படிந்திருந்த ஆழ்ந்த துயரமும் ஆசிரியர்க்குப் புலப்பட்டன. எழுந்து நின்று கை கூப்பினார்; "வாருங்கள்" என்ற ஒற்றைச் சொல் அவரது இதழ்களினின்றும் உதிர்ந்தது.

"என்னைத் தாங்கள் மன்னித்து விடுங்கள். தாங்கள் கூறிய ஒவ்வொரு சொல்லும் என் உள்ளத்தில் மின்னலாகப் பாய்ந்து ஒளி வழங்கி விட்டது. இருட்டுப் படிந்த என் இதயத்தில் அவை வழங்கிய சோதியிலே என்னுடைய செயலின் இழிவு புலப்பட்டுவிட்டது. கல்வித்துறை புனிதமானது: களங்கப்படுத்தாமல் அதனை வளரவிட வேண்டும் என் செல்வத்தினால் எதையெதையோ விலைக்கு வாங்கிவிடலாம் என்று தவறாகக் கருதி விட்டேன். ஆனால் விலை போட்டு வாங்கமுடியாத ஒப்பற்ற பொருளும் பல உண்டு என்று உணருமாறு செய்துவிட்டது. தங்கள் செயல்; வெட்கப்படுகிறேன்; நடந்ததை மறந்து விடுங்கள். தொழில் துறைப் பயிற்சியில் அவனை ஈடுபடுத்தி அவன் முன்னேற்றத்திற்கு ஆவனசெய்ய முடிவுசெய்துவிட்டேன்" என்றார் பரந்தாமனார் தழுதழுத்த குரலில். "ஐயா! தங்கள் மனமாற்றம் எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது," என்றார் அமுதலிங்கம்; "உட்காருங்கள்" என்று நாற்காலியை இழுத்துப்போடப்போன அவரைக் கையமர்த்திவிட்டு "பாவ மன்னிப்பு எங்குக் கோரவேண்டுமோ அங்குப் போய்விட்டு வந்து விடுகிறேன்; எனக்கு அனுமதி கொடுங்கள்" என்று கூறியவராய் விரைந்து திரும்பினார் பரந்தாமனார். அவருடைய கார் திருக்கோயில் செல்லும் சாலையில் செல்லுவதை அமுதலிங்கம் கண்டார்.

பணியிலிருந்து விடுவித்துக்கொள்ள எழுதிய கடிதத்தை அவருடைய கைகள் துண்டு துண்டாகக் கிழித்தன; அந்தக் காகிதத் துண்டுகள் மெல்ல வீசிய காற்றில் படபடத்துப் பறந்தன. நல்லவர்கள் நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

( மலர் 31. இதழ் 12. பக்கம் 674 இன் தொடர்ச்சி )

**அமிழ்தே யென தன்பே சொலும் அருவேதிரு வுருவே**
**தமியேன் துய ரொடு பேதைமை தவிர்த்தே யில கழல்**
**இமிர் சேவடி பெறுமாறருள் இறைவா நறை யளியுண்டு**
**உமிழ் மாலிகை யாவைந் நதி யுடையாய் சுக வாழ்வே. 55**

சொ - ள் அமிழ்தே! எனது அன்பே! சொ (ல்) லும் அருவே! திரு உருவே - அமிழ்தின் மயமானவரே, என்னுடைய அன்பின் வடிவானவரே, மறைகளால் நவிலப்பெறும் உருவில்லாதவரே, வடிவழகான திருவுருவம் உடையவரே, இறைவா - எல்லா வுயிர்களிடத்தும் சென்று தங்கும் இறைவரே! நறை அளி உண்டு உமிழ் மாலிகையா - தேனினையருந்தி உமிழ்கின்ற மலர் மாலையினை யுடையவரே! ஐந்நதி உடையாய்! - திருவையாற்றுப் பெரும்பதியில் எழுந்தருளியிருப்பவரே! சுகவாழ்வு ஏ - பேரின்ப வாழ்வானவரே! (தேவரீர்) தமியேன் - தன்னந் தனியான ஏழையேனுடைய, துயரொடு பேதைமை தவிர்த்து ஏ - துன்பத்துடன் கூடிய அறியாமையினையும் நீக்கி, இலகு கழல் இமிர்சேவடி பெறுமாறு அருள் - விளங்குகின்ற வீரக்கழல் அணிந்த வேதச் சிலம் பொலிக்கின்ற திருவடிகளை அடையும்படி அருளிச்செய்வீராக. எ-று திருவருள் புரிக.

(கு - ரை) அமிழ்து அமிர்து அமிருதம் அமுது என்பன ஒருபொருள். அரு - உருவில்லாதது (வடிவற்றது). திரு உரு - முத்தி வடிவு. பேதைமை - பெரிதும் அறியாமை யுடைமை. தவிர்த்து - நீக்கி. இமிர் (தல்) ஒலித்தல். நறை - தேன் (மணமுமாம்). ஆளியெனற்பாலது அளியெனவாயது. மாலிகை - மாலை. சுகம் - பேரின்பம். சேவடி - செம்மையடி. " சேவடி படரும் செம்மல் உள்ளம் ". துயர் - பிறவித்துயர். துன்பம், தன்னைப்பற்றியும், பிற உயிரைப்பற்றியும், தெய்வத்தைப் (ஊழைப்) பற்றியும் வரும் துன்பமாம். " யாண்டும் இடும்பை " என்றவிடத்து இடும்பை - பிறவித்துயர் எனவரல்கொண்டு

அத்துயர் இவையென அறிதல் வேண்டும். உமிழ்தல் - நழுவ விடல். பெறும் ஆறு - பெறும்வகை. இறை - எல்லாவுயிர்களிடத்துஞ் சென்று தங்குபவன். இறைவா ! விளியாம்.

வாழ்வேயளி சிறிதேனுமில் வஞ்சங்கொளு மதியேன்
பேழ்வாய்மத மருண்மாவுரிப் பெரியோய்வரிக் கீதஞ்
சூழ்கோதையர் மயல்வாரியிற் சுழலாதெடுத் தாண்டாய்
கூழ்வானுயர் செயிலோதிமங் குலவைந்நதிப் பரனே. 56

(சொ - ள்) வாழ்வு ஏ - பேரின்பமாகிய முத்திவாழ்வான வரே, அளி சிறிது ஏனும் இல் (லாத) வஞ்சம் கொ (ள்) ளும் மதியேன் - இரக்கம் சிறிதாயினும் இல்லாத கபடத்தன்மையினையே கொண்ட அறிவுடையேன், (வாழ்வே) பேழ்வாய் மத மருள் மா உரிபெரியோய் - பெரிய தொங்குகின்ற மதமிகவுடைய யானையின் தோலினையுரித்துப் போர்த்தினவரே, கூழ்வான் உயர் செ (ய்) யில் ஓதிமம் குலவு ஐந்நதி பரன் ஏ - பைங்கூழ் எனப் பெறும் செம் சம்பாப் பயிர்கள் வான் அளாவி யுயர்ந்த வயல்களாகிய பழனங்களில் அன்னப்பறவைகள் தங்கியுலாவுகின்ற திருவையாற்றுப் பெரும்பதியில் எழுந்தருளியுள்ள பெருமானே, வரி கீதம் சூழ் கோதையர் மயல் வாரியில் சுழலாது எடுத்து ஆண்டாய் - இரேகைகளை யுடைய வண்டுகள் சுற்றியுள்ள மலர் மாலைகளைத் தரித்த மங்கையர்தம் மயல் ஆகிய கடலின்கண் உள்ள சுழியிடைப்பட்டு உழலாது எடுத்து ஆண்டருளினுய்.

(கு - ரை) அளி - அன்பு, ஏனும் - ஆயினும், கொள்ளும் என்பது கொளும் எனக் குறுகிற்று. மதியேன் - அறிவுடையேன். பேழ்வாய் - பிளந்த பெரியவாய் மருள்மா - மயக்கத்தையுடைய யானை. உரி-உரிக்கப்பட்டது; தோலாம். கீதம்-வண்டு பண் பாடலின். கோதையர் - கூந்தலினையுடைய மங்கையர். மயல் வாரி - உருவகம் (மயலாகிய கடல்). சுழலாது - சுழன்று அமிழ்ந்திடாது. எடுத்து - கரையில் ஏற்றி. " பைங்கூழ் " என வருதல் போன்று கூழ் - சம்பாப்பயிர். செய்யில் எனற்பாலது செயில்என வந்தது. ஓதிமம் - அன்னப்பறவை. அன்னப்பறவை உலவப்பெறுவதால் நீர்வளம் மிகுதியுடைத்தென்பது புலனும். ஆண்டாய் - பிறர் மதந்தழுவாது, சிவனையன்றிப் பவவினை கடக்கமுடியாதுஎன்று உறுதிப்பாடுற நிலைக்கச்செய்து அடிமைகொண்டருளினுய். பரன் - மேலானவன். 'மகாதேவன்' என்னும் பொருளது. ஏகாரம் - அசைநிலை. இச்செய்யுள் சந்தக்கொச்சகக்கலிப்பாவாகும்.

( சந்தப்பா )

பரனேநறும் பதுமாதனன் பரவுந்திரு வையாற் (று)
அரனேயுன்ற னடியேதுணை யல்லாற் பிறிதறியேற் (கு)
உரமேவுநின் னடியாரொடும் உனைப்போற்றவும் இரங்கி
வரமேகொடுத் தாள்வாய்சுடர் வடிவேதனி முதலே 57

(சொ - ள்) சுடர்வடிவே - ஒளியுருவமானவரே, தனி முதல் ஏ - ஒப்பற்ற ஒருமுதலே. பரன் ஏ - பரம்பொரு ளானவரே, நறும் பதும (ம்) ஆதனன் பரவு திரு ஐயாற்று அரன் ஏ - நல்ல செந்தாமரை மலரினை ஆசனமாகவுடைய நான்முகனார் போற்று தலைப் புரியும் திருவையாற்றில் எழுந்தருளியுள்ள மகாதேவரே. உன்றன் அடியே - தேவரீருடைய திருவடிகளையே, துணை அல்லால் - பற்றுக்கோடு (அல்லாமல்), பிறிது அறியேற்கு - பிறிதொன்றினையும் பற்றுக்கோடாக அறியாத எளியேற்கு, உரம் மேவும் நின் அடியாரொடும் - அன்பாகிய வலிமை மேவுகின்ற தேவரீருடைய அடியவரொடும், உ (ன்) னை போற்றவும் - தேவ ரீரைத் துதிக்கவும், இரங்கி - திருவுளம் பெரிதும் இளகி, வரமே கொடுத்து ஆள்வாய் - வரத்தினையே தந்து அடிமைகொண்டு அருள்வீராக. (எ - று)

(கு - ரை) பதுமம் ஆதனன் - பதுமாதனன் என்பது வட மொழித் தொடர். ஆசனம் - ஆதனம் எனவாயிற்று. இருக்கை எனும் பொருளது; பிரமதேவன் ஆம். அரன் - நலம் தருபவன். துணை - பற்றுக்கோடு. பிறிது - வேறொன்றை (யும்). உரம் - வன்மை. சிவனையன்றி யொரு தெய்வமில்லெனும் வன்மை. நல்லாரிணக்கமும் நின் பூசை நேசமும் என்றாற் போல அடியா ரோடும் உன்னைப் போற்றவும் என்றார். இரங்கல் - மனக்கசி வோடு இரங்குதல். சுடர்வடிவு - செம்பொற்சோதி என்னும் பொருளது. தனிமுதல் - ஒப்பற்றவர். ஏகாரம் அசைநிலை. முதல் - முதன்மையானவர். வரம்கொடுத்தல் - நல்லனுக்க என் னும் அருள்மொழி வழங்கல்.

( தொடரும் )

தருமையாதீன மடாலயத்தில்

# சக்கரவர்த்தி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்

## 4—6—1955 இல் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தைத் திறந்துவைத்துப் பேசிய உரைச் சுருக்கம்.

### ஆதீனத்தின் அரும்பணி :

இத்தெய்வ மன்றத்தைத் திறப்பதற்கு எனக்குத் தகுதியில்லை. இருப்பினும் என்பாலுள்ள அன்பின் காரணமாகத்தான் என்னை அழைத்தார்கள். எனக்குப் படிக்கும் சக்தி குறைவு. வருடத்திற்கு 365 நாள் என்றால் 370க்கு மேற்பட்ட நூல்களை இவ்வாதீனத்தில் வெளியிடுவார்கள் போலிருக்கிறது. 'ஆனால்' அவை என்னால் படிக்கமுடியாமல் இருக்கின்றன. இந்த ஆதீனம் செய்யும் பணிகள் மிகப்பல.

### திருவருளால் திறந்தேன் :

மடம் என்றால் பொதுமக்கள் நலன் கருதும் இடம். மடம் என்றாலே பள்ளி என்றும் கூறுவதுண்டு. இங்கிருந்து எனக்கு அழைப்பு வந்தது. தகுதியில்லாதவனை அழைத்து வந்து ஆசனத்தில் அமர்த்தி, இவர்கூட இதில் வந்துகலந்து கொள்கிறார் என்று எல்லோரும் வியக்கும்படி செய்வது ஓர் முறைதான். அவ்வாறான முறையில்தான் இப்போது சிறப்புப்பெறுகிறேன். எனக்குத் தகுதியுண்டாக்கவே என்னை அழைத்தார்கள். இம் மன்றம் திருவருளாலே அமைக்கப் பெற்றிருக்கிறது என்று வரவேற்பில் குறித்திருந்தார்கள். ஆம்; உண்மை. திருவருளால் அமைக்கப் பெற்றதைத் திருவருளால் யான் திறந்தேன் என்று கொள்வதே பொருந்தும்.

### கல்வி பூ ; ஞானம் பழம் :

தமிழிலே நான்கு வரிகளில் பொதிந்து கிடக்கும் கருத்துக்கள் ஆங்கிலக் காவியங்களில் 40, 50 பக்கங்களில்கூடக் காணவில்லை. இம்மன்றத்தைச் சுருக்கமாகக் கூறுவது என்றால் திருநெறிய மன்றம் என்று கூறலாம்; அதிலேயே தெய்வம், தமிழ் என்பவை அடங்கி விடுகின்றன, சுருக்கமாக இருந்தால் எல்லா மக்களும் உச்சரிப்பதற்கு எளிதாக இருக்கும் என்பதற்காக அப்படிச் சொல்லுகிறேன். இம் மன்றம் பல அறிஞர்கள் பேசுவதற்கும் பல திரளான மக்கள் கேட்டுப்பயன் அடைவதற்கும்

ஏற்ற இடமாக இருக்க வேண்டும். இம்மன்றத்தில் இடைவிடாமல் ஞான உபதேசம் நடைபெற வேண்டும். பாடவும், பேசவும், எழுதவும் ஏற்ற பெரிய மன்றமாகத் திகழ வேண்டும். சென்னையிலே சினிமாக்கட்டிடங்கள் தோன்றுகின்றன. இதைப்போன்ற மன்றம் அங்கே இருந்தால் ஞானம் வளரும்; ஆனல் நல்ல ஸ்தலத்திலே மாயூரத்தில் ஏற்பட்டது மிகவும் சிறந்ததே. உலகமெல்லாம் மாயை என்கிறோம். அதில் இதுவும் (மாயபுரமும்) ஒரு மாயாதோற்றம். இந்த நினைப்பு நமக்கு வேண்டும். ஞானம் என்ருல் பக்தி தான். பூவைப்போன்றது படிப்பு. அதில் விளையும் பழம் போன்றது ஞானமாகிய பக்தி.

### கோவில்களும் மடங்களும் :

பக்திக்கு இரண்டு சமயங்கள் நம் நாட்டில் இருக்கின்றன. ஒன்று சைவம், மற்ரென்று வைணவம். இவை வாசலுக்கு இரு கம்பங்கள் போல உள்ளன. தாகத்துக்குத் தண்ணீர் கொடுப்பது குளம், கிணறு முதலியன. அவை தூர்ந்துதான் போகும். இருந்தாலும் தூர்ந்து போகாமல் சுத்தம் செய்து காப்பாற்றுகிரேம். குளம் செவ்வையாக இருந்தால்தான் குடத்தில் நீர் கொண்டு வரலாம். இங்ஙன மிருக்கக் குடம் இருந்தால் போதும், குளம் வேண்டாம் என்று கூறுவது பொருந்துமா? தண்ணீர் கொதிக்க வேண்டுமானல் அடுப்பில் நெருப்பு இருக்க வேண்டும். நீரும் வெப்பமும் ஒன்று சேர்ந்தால்தான் வெந்நீர் கிடைக்கும்; உலை கொதிக்கும்; சோறு சமைக்கலாம். நீரையும் நெருப்பையும் ஒன்று சேர்க்க வேண்டியதுதான் தேவை யென்று கூறிக்கொண்டு தண்ணீரை அடுப்பில் ஊற்றினல் வேண்டியது நிறைவேறிவிடுமா? குளங்களையும் அடுப்பையும் போலத்தான் கோயில்களும், மடங்களும். நாம் உலக தாபத்தால் வருந்துகிரேம். தாபம் தணியவும், நமக்கு நல் உணர்வுமிகுந்து பக்குவப் படவும் கோவில்களும் மடங்களும் இன்றியமையாதன; அவை இல்லாமல் நாம் வாழ்ந்து விடலாம் என்று கூறமுடியாது. ஆதலால் அவைகளைக்காப்பது மிகமிக அவசியம்.

### பக்தி அவசியம் :

பலரும் ஆலயங்களுக்கு வருகின்றனர். அவர்களில் சிலர் நன்கு காய்ந்த விறகைப் போன்றவர்கள். நன்கு காய்ந்த விறகுகள் நெருப்புப்பற்றி எரியும் போது ஈரவிறகு கூட எரியத் தொடங்குகிறது. அதோடு, குப்பை, தூசி முதலியனவும் எரிகின்றன. எனவே பக்தியாகிய நெருப்பு மிக அவசியமானது.

## மனம் குவிய விக்கிரகம் தேவை :

மலையிலே, மரத்தடியிலே, வெட்டவெளியிலே சிலர் பிரார்த்தனை செய்கிறார்கள். அப்படியிருக்க, சிலர், விக்கிரக ஆராதனை எதற்கு என்று கேட்கிறார்கள். இது பகுத்தறிவுக் காலமாதலால் எதையும் தீர்மானிக்க முடியாமல் தவிக்கிறோம். பகுத்தறிவுக்கும் அளவுண்டு. எல்லாச் சமயத்தவர்களும் கடவுள் எங்குமிருக்கிறார் என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். அங்ஙனமெனில், மனத்திலேயே வழிபாடு செய்து கொள்ளலாமே! கம்பம், கல், இவையெல்லாம் வழிபாட்டிற்கு அவசியமா என்று கேட்கிறார்கள். உண்மை எது, பொய் எது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் கீழ் நிலைக்கு மக்கள் போய் விடுவார்கள், மூடர்களாக ஆகிவிடுவார்கள் என்று எண்ணித்தான் பெரிய பெரிய உருவங்களையும் விக்கிரகங்களையும் செய்து வைத்து, கோயில்களையும் கட்டி வைத்துள்ளார்கள் நமது முன்னோர்கள். கடவுள் எங்குமுள்ளார் என்பது உண்மை. ஆகவே, கோயிலில் ஏன் ஆண்டவன் இருக்கமாட்டார்? விக்கிரகம் ஏன் கடவுளுக்கு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனம் குவிய விக்கிரகம் தேவை. இக்காலத்துப் பெரிய விஞ்ஞானிகளும் பௌதிகத்தைப்பற்றி எழுதும் போது கடைசியில் கடவுள் உண்டு என்ற முடிவிற்கு வருகிறார்கள்: என்றாலும் நம் நாட்டிலும் அயல் நாடுகளிலும் இன்றும் கடவுள் உண்மையைப் பற்றிச் சந்தேகித்துப் பேசுகிறவர்கள் இல்லாமல் இல்லை.

## கடவுள் தூணிலும் துரும்பிலும் இருக்கிறார் ;

'கடவுள் இல்லை, இருந்தாலும் கல்லைக் கடவுளாக வழிபடுவது ஏன்' என்றெல்லாம் பிதற்றுகிறார்கள். 'கடவுள் எங்கும் இருக்கிறான் என்றால் தூணிலும் துரும்பிலும் இருப்பானா' என்று இரணியன் சிரித்தான்; இல்லையென்றும் கூறினான். கடவுள் தூணிலிருந்து தோன்றினார். தூண் அழிந்தது; சந்தேகம் ஒழிந்தது; அவனும் ஒழிந்தான்; நாஸ்திகமும் அழிந்தது. ஆனால், நாம் 'உருவத்தில் கடவுள் இருக்கிறாரா? கோவிலில் கடவுள் உண்டா? மடங்களில் தெய்விகம் இருக்கிறதா' என்று கேள்விகளைக் கேட்டுக் கொண்டு அவற்றையும் அழித்து நாமும் அழிந்துவிடக்கூடாது. கடவுள் உணர்ச்சியும் பெறவேண்டும்; பெற்றதை அனுபவித்துப் பயன் அடைய நாமும் இருக்க வேண்டும். அதற்கு ஏற்றவழி தூணை உதைத்துத் தள்ளாமல் அத்தூணில் எங்கும் உள்ள இறைவனை வழிபடுவதுதான். இதில் ஆட்சேபம் தேவையில்லை. வழிபடுவதற்கு நல்ல உருவமும் செய்யலாம். அல்லது ஒரு பிடி மண்ணை எடுத்துக் கோணலாக உருவம் செய்தும் பூசை செய்யலாம். பூசை செய்து முடிந்ததும் எறிந்தும் விடுகிறோம்.

## மனத்தில் கடவுளை நிறுத்துவது எளிதல்ல :

பாழும் மனத்திலே கடவுளை உருவமற்ற நிலையிலே நிறுத்துவது எளிதல்ல. மன ஒருமைப்பாடு ஏற்படுவதில்லை. மன ஒருமைப்பாட்டிற்காக உருவ வழிபாடு செய்கிறோம். அவ்வாறு வழிபடுவது தவறு என்று சொன்னால் நம்பாதீர்கள். செடிக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டியது எவ்வளவு அவசியமோ அதேபோன்று கடவுளிடத்தில் பக்தி செலுத்துவதும் மிக அவசியமான கடமையாகும். புதுயுகம் இது; விஞ்ஞானம் வளர்கிறது. விஞ்ஞானங் கண்ட உண்மைகளிலிருந்து கடவுளைக்கண்டு கூறுகிறார்கள். பெரிய விஞ்ஞானிகள் கூட இவ்வகையில் கடவுளைக்கண்டு வழிபடலாம். மற்றவர்கட்கும் காட்டலாம். சமயத்தைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் சில காலத்திற்கு முன்பு நான் பேசினால் அது ஆஷாடபூதித்தனம் என்பார்கள். ஆனால் நான் மிகவும் தைரியமாகக் கூறுவதாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குறிப்பிட்டார்கள். கடவுளைப்பற்றித் தைரியமாகப் பேசுகிறேன் என்பது எப்படியிருக்கிறது? ஒருவன் தைரியமாகச் சாப்பிடுகிறான் என்று சொல்வது போல் இல்லையா? ஒருவன் எவ்வளவு தைரியமாக வாழைப் பழத்தைச் சாப்பிடுகிறான் பார் என்பது போல இருக்கிறது.

## வருந்தத்தக்க நிலை :

ஆகவே பக்திக்குத் தைரியம் வேண்டுவதில்லை. பக்தியைப் பற்றியும் சமயத்தைப்பற்றியும் பேச வேண்டுமானால் தைரியம் வேண்டும் என்ற நிலை இன்று வந்துவிட்டது. இது வருந்தத் தக்க நிலையே! இதற்குத் தைரியம் வேண்டுவதில்லை. அறிவு இருந்தால் போதும். அரசியலும் சமயமும் ஒன்றுதான். எல்லாவற்றிலும் அறம் உண்டு. எல்லாவற்றிற்கும் தருமம், ஞானம், பக்தி இவை இன்றியமையாதனவே.

---

## பாதுகாப்பு எது

1. மெதுவாகப் பேசு - அது உன் ரகசியங்களைப் பாதுகாக்கும்.
2. நல்ல எண்ணத்தோடு இரு - அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.
3. உண்மையையே சொல் - அது உன்வார்த்தைகளைப் பாதுகாக்கும்.
4. கலந்து யோசனை செய் - அது உன் சிந்தனையைப் பாதுகாக்கும்.

—வடலூர் வள்ளலார்.

எடுத்தெழுதியவர் :- இரா. செ.

---

# செய்திகள்

## ஆதீன தேவஸ்தானங்களில் பாவைமாநாடு

**வள்ளலார்கோயிலில்:**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் வள்ளலார் கோயில் ஸ்ரீ வதான்யேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் ஜனவரி 10, 11 (புதன், வியாழன்) ஆகிய இரு நாட்களிலும் பாவை மாநாடு மிகச்சிறப்பாக நடந்தேறியது.

10—1—73 மாலை 6-30 மணி அளவில் தொடங்கிய கருத்தரங்கத்தை, தஞ்சாவூர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர், திரு. V. S. கோதண்டபாணி B, Sc , B, L., அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

திருப்பாவை என்னும் பொருள்பற்றி டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் அவர்களும் திருவெம்பாவை என்னும் பொருள் பற்றி திருவாசகமணி, திரு. K. M, பாலசுப்பிரமணியம் அவர்களும் சிறப்பாக உரையாற்றினர், இரவு மாயூரம் ஸ்ரீகணநாதர் பொம்மை நாடக சபையினரால் சிறுத்தொண்டர் வரலாறு பொம்மலாட்டமாக நடத்திக்காட்டப்பட்டது.

11—1—73 மாலை இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் பட்டி மண்டபமாக அமைந்தது. கும்பகோணம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் திரு. ந. அர்ச்சுனன் B.A-, B, L.. அவர்கள் பட்டிமன்றத்தைத் தொடங்கிவைத்தார்கள். மகா வித்துவான், திரு, ச, தண்டபாணி தேசிகர் அவர்கள் நடுவராக அமைந்தார்கள். திருவெம்பாவையுள் விஞ்சிநிற்பது இலக்கிய நலமே என திரு, அ. கலியபெருமாள் எம். ஏ., திரு. இரா. செல்வக்கணபதி. திரு, வே. கண்ணப்பன் மூவரும் வாதிட்டனர். பக்திக்கனிவே விஞ்சிநிற்பதென திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. அ. பாலருவாயன் எம். ஏ,, திரு ஆ. இராமபத்திரன் பி ஏ., மூவரும் வாதிட்டனர், நடுவர் பத்திக்கனிவே விஞ்சிநிற்கிறது எனத் தீர்ப்பளிக்க இரவு 11 மணி அளவில் மாநாட்டு நிகழ்ச்சிகள் யாவும் சிறப்புற முற்றுப்பெற்றன. திரளான அன்பர்கள் மாநாட்டில் பங்குபற்றித் திருவருள்பெற்றனர்.

**திருபுவனத்தில் .**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் பாவை மாநாடு 4—1—73 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு டாக்டர். திரு. மு. சுவாமிநாதன் M. B. B. S. அவர்கள் சிறப்புரையுடன் தொடங்கிற்று. சிறப்புரையில் மக்கள் பண்பாட்டுடன் வாழவும், சைவநன்னெறி விளக்கமுறவும் இத்தகைய மாநாடுகள் துணைசெய்யும் என்று குறிப்பிட்டார்கள். பின்னர் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலனார், திரு. கு. சுந்தரமூர்த்தி ஆகியோர் முறையே "தைந்நீராடல்", "மார்கழிச் சிறப்பு" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

**திருக்கடவூரில் :**

தருமையாதீனத்திற்குச்சொந்தமான திருக்கடவூர்ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 5—1—73 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மாயூரம் அ. வ. அ. கல்லூரி முதல்வர் திரு. முத்து. விசுவநாதன் M. A, அவர்கள் சிறப்புரையுடன் மாநாடு தொடங்கிற்று. "பாவை நோன்பு" மிகப் பழங்காலம் முதலாகக் கொண்டாடப்படுவது. அந்நோன்பால் மழைவளம் முதலியன பெருகி நாடு சிறப்புற்றது என்பனபோன்ற கருத்துக்களைத் தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்கள். "பாவையும்கோவையும்; "மார்கழி நீராடல்" என்ற தலைப்புக்களில் முறையே திரு. சி. அருணைவடிவேல் முதலியார், திரு. இரா. செல்வக்கணபதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

**திருக்குவளையில் :**

தருமையாதீனத்திற்குச்சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் பாவை மாநாடு 6—1—73 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நாகப்பட்டினம், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் திரு. நா. சீனிவாசன் B. A. B; L. அவர்கள் தொடக்கவுரையுடன் தொடங்கிற்று. 'தருமையாதீனத் திருக்கோயில்களில் பாவைமாநாடு சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. மக்கள் பாவைப் பாடல்களின் பொருளை உணர்ந்து அதன் பயன் பெறவே இவ்வாறு மாநாடுகள் எல்லா இடங்களிலும் நடத்தப்பெறுகின்றன' என்று தொடக்கவுரையில் குறிப்பிட்டார்கள். அடுத்து திருவாரூர் தமிழாசிரியர் திரு. S. சுந்தரேசன் "பாவையும் கோவையும்"

என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றியபின்னர், திருவாரூர் திரு. கே. சாம்பசிவ முதலியார் B. A. B. T. அவர்கள் "மாணிக்க வாசகர்" வரலாற்றை இன்னிசைச் சொற்பொழிவாக நிகழ்த்தினார்கள்.

**திருவையாற்றில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் பாவை மாநாடு 8—1—73 திங்கட்கிழமை மாலை 6 மணிக்குத் தஞ்சை திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் சிறப்புரையுடன் நிகழ்ந்தது. திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. மு. சுந்தரேசம் பிள்ளை ஆகியோர் முறையே "திருப்பள்ளியெழுச்சி", "பாவை நோன்பு" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

**திருப்பனந்தாளில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 9—1—73 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு கும்பகோணம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் திரு. R, அர்ச்சுனன் B. A. B. L. அவர்கள் சிறப்புரையுடன் பாவை மாநாடு நடைபெற்றது. மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் "திருவெம்பாவையில் ஐந்தொழிற் சிறப்பு" என்ற தலைப்பிலும், திரு. இரா. செல்வக்கணபதி "மார்கழி நீராடல்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்கள்.

**வேளூரில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் பாவை மாநாடு 8—1—73 திங்கட்கிழமை மாலை 6 மணிக்குச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "பாவை நோன்பு" என்ற தலைப்பிலும், திரு. A. பாலருவாயன் M. A. அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்கள்.

**சீகாழியில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் பாவை மாநாடு 12—1—73 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் பட்டிமண்டபமாக நிகழ்ந்தது.

திருவெம்பாவையுள் மிகுந்து காணப்படுவது தன்னலமா? பொதுநலமா? என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. பேராசிரியர் தி. வ. காந்திமதிநாதன் M. A. (Hon's.) அவர்கள் நடுவராக இருந்தார்கள். தன்னலமே என்ற கட்சியில் திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. இரா. செல்வக்கணபதி, திரு. வே. கண்ணப்பன் ஆகியோர் வாதிட்டனர். பொதுநலமே என்ற கட்சியில் திரு. கலியபெருமாள் M. A., திரு. ஆ. இராம பத்திரன் B. A., திரு. அ. பாலகுருவாயன் M. A., ஆகியோர் வாதிட்டனர். இருகட்சிகளின் வாதங்களையும் சீர்தூக்கி ஆய்வுரை வழங்கி, திருவெம்பாவையுள் மிகுந்து காணப்படுவது 'பொது நலமே' என்று நடுவர் தீர்ப்பு வழங்கினர்.

## வேளூரில் தைச்செவ்வாய்த் திருவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு 28—1—73 முதல் தொடங்கி 6—2—73 முடிய உள்ள நாட்களில் தைச்செவ்வாய் உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தைமாதக் கடைசிச் செவ்வாய்க்கிழமையைத் தீர்த்தத் திருநாளாகக்கொண்டு பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாவாகிய இது, முருக வழிபாட்டுக்குரிய தலங்களில் வேறு எங்கும் இல்லாத சிறப்புமிக்கது. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி திருவீதிக்கு எழுந்தருளிய அருட்காட்சியை இப்பத்துநாட்களிலும் கண்டு அன்பர்கள் வழிபட்டு உய்ந்தனர்.

30—1—73 செவ்வாய்க்கிழமை திரு. வி. சா. குருசாமிதேசிகர் "கந்தர் அனுபூதி" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிய பின்னர், "திருநீலகண்டர் வரலாறு" என்பதுபற்றி பவானி திரு. மு. கண்ணப்பர் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். 2—2—73 வெள்ளிக்கிழமை திரு. இரா. செல்வக்கணபதி "அருணகிரிநாதர்" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்கள். அடுத்து வேலூர் திரு. K. குணபூஷணம் அவர்கள் "தம்பிரான் தோழர் தவநிலை" என்னும் தலைப்பில் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். 4—2—73 ஞாயிற்றுக்கிழமை டாக்டர், திரு. சொ. சிங்காரவேலனர் M. A. Phd., அவர்கள் "கந்தர் அலங்காரம்" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றிய பின்னர் "மார்க்கண்டேயர் வரலாறு" பொம்மலாட்டமாக நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயன்பெற்றனர்.

## சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

சென்னை, சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர வழிபாடும் சமயப்பிரசாரமும், கோடம்பாக்கம் ஸ்ரீ சாந்தநாயகி சமேத ஸ்ரீ வேங்கீஸ்வரர் ஆலயத்தில் 31—12—72 அன்று சிறப்பாக நடைபெற்றது. மாதாந்தர வழிபாட்டு அன்பர்கள் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. திரு. ந. இராமலிங்கம், திரு. தண்டபாணி, திரு. என். இராமமூர்த்தி அய்யர் ஆகியோர் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர். பின்னர் நிகழ்ந்த சமயப்பிரசாரக் கூட்டத்தில் வித்துவான் திரு. த. கேசவன், வித்துவான் திரு ந. இராசு, அட்வகேட் திரு. என். பழனியப்பன் பி. ஏ., பி. எல். முதலியோர் தெய்வவழிபாட்டின் இன்றியமையாமைபற்றிப் பேசினர். வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கந் தம்பிரான் சுவாமிகள் ' நால்வர் கண்ட அன்புநெறி' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றி எல்லோரையும் சிவநெறியில் ஈடுபடுத்தினார்கள்.

28—1—73 ஞாயிற்றுக்கிழமையன்று நுங்கம்பாக்கம் ஸ்ரீ அகிலாண்டேசுவரி சமேத ஸ்ரீ அகத்தீசுவரர் ஆலயத்தில் மாதாந்தர வழிபாடு சிறப்பாக நிகழ்ந்தது. மாதாந்தர வழிபாட்டு அன்பர்கள் சார்பில் சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் நடைபெற்றன. திரு. சு. ஞானப்பிரகாசம். திரு. ந. இராமலிங்கம், திரு. மு. கு. புண்ணியகோடி ஆகியோர் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர். ஆலய மண்டபத்தில் நிகழ்ந்த பிரசாரக் கூட்டத்தில் திரு. மு. கு. புண்ணியகோடி, திருமதி. மீனாட்சிசுந்தர சிவை, திரு. தெ. ஞானசுந்தரம் ஆகியோர் சமயப்பிரசாரத்தின் இன்றியமையாமையை வற்புறுத்திப் பேசினார்கள். கோயில் அறங்காவலர் வழிபாட்டுக்குழுவினரை வரவேற்று உடனிருந்து வழிபாடு செய்வித்தார்கள். அன்பர்களுக்குப்பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

## சிவஞானசித்தியார் பாட வகுப்பு

சென்னை, சமயப்பிரசார நிலையத்தில் 10—12—72, 17–12–72, 31—12—72, 7—1—73, 28—1—73 ஆகிய ஞாயிற்றுக்கிழமை நாட்களில் சிவஞான சித்தியார் பாடவகுப்பு நடைபெற்றது. திரு ந. ரா. முருகவேள் அவர்களால் பரபக்கம் பாடமாக நடத்தப்பெற்றது. அன்பர்கள் பலர் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## வேலூர், கிருத்திகைபிரசாதம் வழங்கும் விழா

சென்னை சமயப் பிரசார நிலையத்தில் 19—12—72 அன்று கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா, சென்னை வழக்கறிஞர் திரு சோமசுந்தரம் பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமையிலும், 15—1—73 அன்று கவிஞர் திரு. கண்ணதாசன் அவர்கள் தலைமையிலும் சிறப்பாக நடைபெற்றது. இறைவழிபாட்டின் இன்றியமையாமையையும் வேலூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமியின் சிறப்பையும் விளக்கிப் பேசி வேலூர்த் தேவாரம் திருப்புகழ் நாமாவளி முதலிய தோத்திரப் பாடல்களைப் பாடி பிரார்த்தித்தனர். நன்றியுரைக்குப் பின் சந்தனக்குழம்பு பிர சாதம் அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.

## பொங்கல் விழா

சென்னை, சமயப் பிரசார நிலையத்தில் 14—1—73 அன்று பொங்கல்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வழக்கறிஞர் திரு. என். பழனியப்பன் பி. ஏ., பி. எல். அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றுத் தலைமையுரையாற்றினார்கள். திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ.. அவர்கள் பொங்கல் விழாப்பற்றி விளக்க வுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

## திருக்கடவூர் 1008 சங்காபிஷேக தீர்த்தப் பிரசாதம் வழங்கும்விழா

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரருக்குக் கார்த்திகைச் சோம வார நாட்களில் 1008 சங்காபிஷேகம் நிகழ்வதையும், சங்காபி ஷேக தீர்த்தப் பிரசாதம் மறுநாள் சென்னை சமயப் பிரசார நிலையத்தில் வழிபாடு நிகழ்த்தி, மாதாந்தர வழிபாட்டுக் குழு வினருக்குவழங்கப்படுவதையும்அனைவரும்அறிவர். அம்முறையில் 4—12—72 இல் நிகழ்ந்த சங்காபிஷேக தீர்த்தப் பிரசாதம் 5—12—72 அன்று மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் திரு. செல்வ நடராச முதலியார் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது.

11—12—72இல் நிகழ்ந்த சங்காபிஷேக தீர்த்தப் பிரசாதம் 12—12—72 அன்று திரு. வி. என். ஆறுமுகம் அவர்கள் தலைமை யில் வழங்கப்பட்டது. பிரசாதம் வழங்கும் நாட்களில் திருக் கடவூர்த் தேவாரத் திருப்பதிகம் பாராயணம் நிகழ்த்தப் பெற்றது.

## நாயன்மார்கள் குருபூஜை விழா

சென்னை சமயப் பிரசார நிலையத்தில் 1972 டிசம்பர் திங்கள் 7, 8, 21, 27, 30 ஆகிய நாட்களில் முறையே மூர்க்க நாயனார், சிறப்புலி நாயனார், சடைய நாயனார், இயற்பகை நாயனார், கஞ் சாற நாயனார் குருபூஜைகளும் 1973 ஜனவரித்திங்கள் 17, 23, 27 ஆகிய நாட்களில் முறையே சாக்கிய நாயனார், வாயிலார் நாய னார், கண்ணப்ப நாயனார், திலகவதியார் அரிவாட்டாய நாய னார், சண்டேசுர நாயனார், திருநீலகண்ட நாயனார் குருபூஜை களும் நிகழ்ந்தன. தேவாரவகுப்பு ஆசிரியர் மாணவர்களால் திருமுறைப் பாராயணமும், அன்பர்களால் வழிபாடும் நிகழ்த்தப் பட்டன. வித்துவான் திரு. வடிவேல் பிள்ளை அவர்கள் நாயன் மார்களின் புராண விரிவுரை நிகழ்த்தினர்கள். அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

## திருவெம்பாவை மாநாடு

சென்னை, சமயப்பிரசார நிலையத்தில், திருவெம்பாவை மாநாடு 10—1—73 அன்று சென்னை உயர்மன்ற நீதிபதி கனம். திரு. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. 'இரு பாவைகளும் ஆண்டவனை அடைய உதவுகின்றன. நல்ல பண்பாடு வளரவும், மக்களை நன்னெறியில் நிற்கச்செய்யவும் இளஞ்சிறுவர்களுக்குப் பக்திவிதையாகிய பாவைப் பாடல்களைப் போதிக்கவேண்டும். இந்த வகையில் தருமையாதீனம் ஒல்லும் வகையால் நல்லபணிகளைச் செய்து வருகின்றது, என்று குறிப் பிட்டார்கள்.

அடுத்து திருமதி டி. என். அனந்தநாயகி எம். எல். ஏ. அவர்கள் 'மின்சாரப் பற்றுக்குறைக்கும் பால், தயிர் முதலிய போதிய அளவு கிடைக்காமல் இருப்பதற்கும் மழையின்மையே காரணம். இக்குறைகளைப் போக்க நம் முன்னோர் பாவை நோன்பு நோற்றனர். பாவை நோன்பால் தீங்கின்றி நாடெல் லாம் மாதம் மும்மாரி மழைபொழியும்' என்று தமது உரையில் குறிப்பிட்டார்கள்.

விவேகானந்தர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் திரு. C. ஜெக நாதாசாரியார் அவர்களும், கந்தசாமி நாயடு கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. தெ. ஞானசுந்தரம் M. A., அவர்களும் 'இரு பாவைகளும் ஆண்டவனை' அடையும் நெறிகளைக் காட்டுகிறது. ஆதலால் மார்கழி முப்பது நாட்களிலும் பாவைப்பாடல்களை ஓதி

உய்யவேண்டும்' என்று குறிப்பிட்டனர். வித்துவான். ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறி விழா நிகழ்ச்சிகளை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

## கயிலாயநாதர் திருவுருவப்படத்திற்குவழிபாடு

சென்னை சமயப்பிரசார நிலையத்தில் 1972 டிசம்பர் திங்களிலும் 1973 ஜனவரித்திங்களிலும் உள்ள திங்கட்கிழமைகளில் ஸ்ரீ கயிலாயநாதர் திருவுருவப் படத்திற்கு அலங்காரம் செய்து வழிபாடு நிகழ்த்தப்பட்டது. தேவார வகுப்பு ஆசிரியர் மாணவர்களால் கயிலைப் பதிகப் பாராயணம் நிகழ்த்தப்பட்டது. வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

## 19ஆவது ஆண்டு நிறைவுவிழா

சென்னை, சமயப்பிரசார நிலையத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவு 11—1—73 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. நாதஸ்வர இன்னிசையுடன் விழா தொடங்கிற்று. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. எஸ். மகராஜன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று, தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர், தமது ஞானாசாரியராகிய கமலை ஞானப்பிரகாசர் உபதேசித்த மோனப் பிரகாசத்தைக் கேட்டவுடன் அடைந்த நிலைபற்றித் திருமந்திரப்பாடல் மூலம் விளக்கம் சொன்னார்கள்.

புலவர் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் ' திருஞானசம்பந்தர் காலத்திலேயே சமயப் பிரசாரம் தொடங்கப்பெற்றது. தருமையாதீனத்தின் சமயப்பிரசாரம் இந்த அமைப்பின்மூலம் சிறப்பாக நடைபெறுகிறது என்று குறிப்பிட்டார்கள். திரு. கீ. இராமலிங்கனார் எம். ஏ., அவர்கள் சும்மா இரு சொல்லற 'என்ற சொற்றொடரை நினைவில் கொண்டு உயர்ச்சி பெறவேண்டும். இப்பிரசார நிலையம் ஆன்மிக நெறிக்குக் கலங்கரை விளக்குப் போன்று விளங்குகிறது' என்று குறிப்பிட்டார்கள். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை முதலியன கூறி விழாவை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

# வாழும் நெறி*

சென்னை, உயர் நீதிமன்ற நடுவர்,

**திரு. S. மகராஜன் M. A., B. L.,**

லெயோ டால்ஸ்டாய் (Leo Tolstol) என்ற ஞானி ஒருவர் ரஷ்யாவில் வாழ்ந்து வந்தார். அவர் காலத்தில் ரஷ்யாவில் பிச்சைக்காரர்களுடைய தொல்லை அதிகம். மாஸ்கோ நகரத்தின் 24 ஆவது சாலையிலே அவர் நடந்து சென்று கொண்டிருந்த போது ஒரு பிச்சைக்காரன் அவரை வழி மறித்து, அவர் சட்டையைப் பிடித்து இழுத்து, "ஐயா பிச்சை" என்று கேட்டான் டால்ஸ்டாய் இளக்கமான மனமுடையவர்; பரிவு நிறைந்தவர். பிச்சை கொடுக்க வேண்டும் என்ற ஆத்திரத்தில் தன் நீண்ட கையைச் சட்டைப்பைக்குள் விட்டுத் துழாவித் துழாவிப் பார்த்தார். பைக்குள்ளே ஒரு காசுகூட இல்லை. மன வேதனையோடு பிச்சைக்காரனைப் பார்த்து "பையிலே பணமில்லையே, தம்பி பணமில்லையே", என்று சொன்னார். இதைக்கேட்டவுடன் பசியால் வதங்கிப் போயிருந்த பிச்சைக்காரன்முகத்தில் என்றுமில்லாத ஒரு ஒளி பிறந்தது "பிச்சைக்காசு இல்லையென்பதற்காக நீங்கள் வருந்த வேண்டாம். பிச்சை கொடுப்பதைக் காட்டிலும் பெரிய உதவியொன்றை நீங்கள் எனக்குச் செய்து விட்டீர்கள் ஐயா. 'தம்பி' என்றல்லவா என்னை அழைத்து விட்டீர்கள்; அது போதும்", என்று சொன்னான், பிச்சைக்காரன். கொஞ்சமும் தன்னை மதிக்காத இவ்வுலகத்திலே, தன்னையும் ஒரு உருப்படியாக மதித்து தம்பியென்று உறவு கொண்டாடிய டால்ஸ்டாயிடத்திலே பிச்சைக்காரனுக்கு அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டு விட்டது. கேவலம் பணத்தினால் கிட்டாத மகிழ்ச்சியும் ஊக்கமும் பரிவினால் கிட்டிவிடுகிறது.

உலகத்திலுள்ள துன்பங்கள் பலவற்றிற்கும் காரணமாக இருப்பது பரிவின்மைதான். அந்தப்பரிவைப் பெறுவதுஎப்படி? நாள்தோறும் கொஞ்ச நேரமாவது நம்மைப் பற்றியசிந்தனையினின்றும் நம்மை விடுவித்துக்கொண்டு, கூடு விட்டுக் கூடு பாய்ந்து மற்றவர்களுடைய இதயத்தில் அமர்ந்து அவர்களுடைய கண்கள் வழியாக உலகத்தைப் பார்க்க முயலுவோமேயானால் டால்ஸ்டாய்க்கு ஏற்பட்ட பரிவுணர்ச்சி நமக்கும் கைவரும்.

நியூயார்க் (New York) நகரத்திலேயிருந்து உளமருத்துவ நிபுணரிடத்தில் (Pspchiatrist) ஆலோசனை கேட்பதற்காக வந்தாள் ஒரு பெண். "நான் ஒரு தொழிற்சாலையின்

---

* ஆடத்தெரியாத கடவுள் என்ற நூலிலிருந்து வெளியிடப் படுகிறது.

தலைமை அலுவலரிடத்திலே சுருக்கெழுத்தாளராக வேலை பார்க்கிறேன். என்னுடைய அதிகாரி ஒரு சுடுமூஞ்சி. எனக்கு அவனுடைய கோபதாபங்களையெல்லாம் தாங்க முடியவில்லை. அவனுடைய கொடுங்கோன்மையை நினைத்தால் இரவில் தூக்கம் வருவதில்லை. வேலையை விட்டுவிட வேண்டும் என்று தீர்மானத்திற்கு வந்திருக்கிறேன். அதற்கு முன் உங்கள் ஆலோசனையையும் கேட்கலாமே என்று வந்தேன், என்ன சொல்லுகிறீர்கள்" என்று பரபரப்போடு கேட்டாள். வைத்தியர் சொன்னார். 'அம்மா நான் ஒரு யுக்தி சொல்கிறேன். அதன்படி மூன்று மாதம் நடந்துவிட்டு மறுபடியும் என்னிடம் வா, பிறகு ராஜிநாமாவைப் பற்றிச் சிந்திப்போம்" என்றார்.

அவர் சொன்ன யுக்தி இதுதான்; "சுடுமூஞ்சியிடத்திலும் சில நற்குணங்கள் பதுங்கிக் கொண்டிருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து, வாயார அவற்றைப் பாராட்டு; ஒரு நாளைக்கு ஒரு பாராட்டு என்று வைத்துக்கொள்." என்று சொல்லியனுப்பினார்.

இந்த ஆலோசனையை மேற்கொள்ளத் தலைப்பட்டாள் சுருக்கெழுத்துப் பெண். மறுநாள் சுருக்கெழுத்து எழுதுவதற்காக எஜமானரிடம் போனாள். அவன் அணிந்திருந்த சட்டை அழகாக இருந்தது. அதை உள்ளன்போடு பாராட்டினாள். அடுத்த நாள் அவனுடைய ஆங்கில எழுத்து நடையின் நுணுக்கத்தை உணர்ந்து பாராட்டினாள். இப்படியாகப் பாராட்டுக்கள் ஏற ஏற, எஜமானனுடைய சுடுமூஞ்சித்தனம் குறைந்துகொண்டே வந்தது. கதையை வளர்ப்பானேன்; சுடுமூஞ்சியாயிருந்தவன் காதலனாகி விட்டான். மூன்று மாதங்கள் கழித்து மருத்துவரைப் பார்க்கச் சென்றாள் பெண். "என்னம்மா, ராஜினாமா பண்ண வேண்டியதுதானே!" என்று கேட்டார் அவர். "ஐயோ இராஜினாமாவா? என்னை அவர் நாளைக்குத் திருமணம் செய்து கொள்ளப்போகிறார். பாருங்கள் இதை." என்று சொல்லி அவர் பரிசாகக் கொடுத்திருந்த வைரமோதிரத்தைக் காட்டினாள்; பரிவினால் வந்த விளைவை அது டால் அடித்துக் காட்டிக் கொண்டிருந்தது.

தம்மைச் சுற்றியுள்ளவர்களிடத்தில், நம்மிடமிருப்பது போலவே பல குற்றங்களிருக்கலாம். அவற்றைக் கொஞ்ச நேரமாவது மறந்துவிட்டு அவர்களிடமிருக்கும் ஒரு துளி நல்ல குணத்தை முயன்று கண்டுபிடித்து நாம் பாராட்டக் கற்றுக் கொள்ளவேண்டும். இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டால் நம்மிடமிருக்கும் பொறாமை நம்மை விட்டு அகலும். இங்கிதம் பெருகும். சமுதாயத்தில் மங்களம் பொங்கும்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

( பரிதாபிஆ மாசிமீ 1உ முதல் 30உ முடிய )

( 12—2—73 முதல் 13—3—73 முடிய )

மாசி மாதம் 1உ பகல் 15 நாழி 6 விளுடிக்கு லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் மகரராசியிலிருந்து கும்பசங்கிரமணமாக மாசி மாத பிரவேசம், விருஷப லக்கினத்திலும் ரோகிணி நக்ஷத்திரம் மிருகசீரிஷ நக்ஷத்திர சந்தியிலும் பிரவேச கால லக்கினத்தில் சனியும், 2, 8ல் கேது, ராகுவும் அமைந்த வேளையில் கும்ப சங்கிரமணம் செய்கிறபடியால் அதன் பலன் பிரஜைகளுக்கும் உலகம் முழுவதுக்கும் நன்மை ஏற்பட ஒவ்வொருவரும் ஆஸ்தீக ஜனங்களும், பக்தர்களும் கடவுளை இடைவிடாது பிரார்த்தனை செய்துகொண்டு அவரவர்களும் தன்னால் முடிந்தவரை உலக அமைதியையும் இயற்கைக் கோளாறுகள் வராமலும் பார்த்துக்கொண்டு முடிந்தவரைபக்தியுடன் யக்ஞ யாகங்களும் அர்ச்சனுதிகளும் செய்துவர எல்லோரும் சௌக்கியமடையலாம். கடவுள் காப்பார். சுபமுண்டாகும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பத்தில் மங்களகரமான காரியங்களும் தூரதேச யாத்திரையும் தனதான்ய ஸமிருத்தியும் நஷ்ட தனம் வந்துசேர்வதும் புத்திராதிகளால் நன்மையும் உண்டாகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். மாத ஆரம்பத்தில் வீண் அலைச்சல்களும் சொல்பமான நஷ்டங்

களும் மனதுக்குக் கவலைகளும் ஆரோக்யக் குறைவும் காட்டும். பின்பாதியில் எல்லாம் நன்மையாகவே இருந்துகொண்டு இருக்கும். புதன் வியாழன் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். இடம் மாறி ஜீவன விருத்தி உண்டாகும். வியாதி சாந்தியாகும். மேலோர் பெரியோர்களின் தரிசனங்களும் படிப்பு விருத்தியும் ஏற்படும். வெள்ளி சனி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். நினைத்தபடி காரியங்கள் நடக்காமல் தவக்கத்துடன் நடந்து கொண்டு இருக்கும். தனதான்ய விருத்தியும், அதற்குத் தகுந்தபடி செலவுகளும் ஏற்படும். உலக பிரசித்தியும் கீர்த்தி பத்திரமும் கிடைக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். குடும்பம் ஓங்கும் ஜீவனவிருத்தியும் மேலோர் பெரியோர்களின் அன்பும் புதிதான தொழிலில் பழக்கமும் ஏற்படும். பலபேர்களுடை அன்பினல் சகலமும் சாத்தியமாகும். ஆஸ்திகம் அதிகமாகும் தெய்வ சக்தி பிரகாசிக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். குடும்ப நிர்வாகத்திலும் ஜீவன காரியங்களிலும் பலவிதமான சிக்கல்கள் உண்டாகும். எல்லாம் தெய்வ பலத்தால் நன்மையாக முடியும். பழைய பழக்கங்களில் சிலமாறுதல்கள் ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபபலனைத்தரும். தனதான்ய விருத்தியும் ஜீவன விருத்தியும் ஏற்படும். ஆரோக்யம் உண்டுபண்ணும். தெய்வசக்தி பிரகாசிக்கும். புதிதான பழக்கங்களால் அநேக மாறுதல்கள் உண்டு பண்ணும். சனி ஞாயிறு சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவுசெலவுசமமாக இருந்துகொண்டு இருக்கும். குடும்பத்தில் தொல்லேயும் வியாதி பீடையும் காட்டும். இடம் மாறுதலும் புதிதான தொழில் பழக்கமும் மேலோர் பெரியோர்களின் அன்பும் கிடைக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். மங்கள கரமான காரியங்களில் ஈடுபடுதலும் ஏற்படும். சகலமான காரியங்களும் கொஞ்சம் தவக்கத்தோடு நன்மையாகவே முடியும். இடம் மாறுதல் ஏற்படும். புதன் வியாழன் சுப மாகும்

10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். செலவினங்கள் அதிகமாகும். அதிகமான உழைப்பும் அதிக மான தொல்லேகளும் ஏற்படும். குடும்பம் விருத்தியாகும். புதிதான தொழில் பழக்கங்களால் உலக பிரசித்தி ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½-சதயம் -பூரட்டாதி-¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அதிகமான உழைப்பும் வீண் அலேச்சல்களும் எதிர்பாராத செலவினங்களும் ஏற்படும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வந்துசேரும். வரவும் செலவும் சமமாக இருந்து கொண்டு இருக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். அநேகவிதமான தொழில் பழக்கங்கள் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பினுல் விசேஷமான லாபமும் உண்டாகும். தெய்வசக்தி பிரகாசிக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.